# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

ஜூலை 2001 ஜீவியம் 7 மலர் 3

## இம்மாத மலரில்..........


| பொருளடக்கம் | பக்கம் |
|---|---|
| *யோக வாழ்க்கை விளக்கம்* IV | 2 |
| *இம்மாதச் செய்தி* | 7 |
| *லைப் டிவைன்* | 8 |
| *சாவித்ரி* | 19 |
| *அஜெண்டா* | 21 |
| *அன்பர் கடிதம்* | 23 |
| *பகவானுடைய இதர நூல்கள்* | 30 |
| *லைப் டிவைன் - கருத்து* | 32 |
| *அன்னை அன்பர்கட்குச் சுதந்திரமும் தேவை, கட்டுப்பாடும் தேவை* | 34 |
| *திருவுருமாற்றிய தெய்வீக அன்னை* | 48 |
| *கன்சல்டன்சி* | 58 |
| *பிரார்த்தனை பலிக்க வேண்டும்* | 60 |


❊ ❊ ❊

**கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.**

**வருடச் சந்தா ரூ.60/-**

# யோக வாழ்க்கை விளக்கம் IV

கர்மயோகி

**649) பிராணனை அதன் ஆர்வம் தீர்ந்தபின் வற்புறுத்தினால், அதற்கு அளவுகடந்த கோபம் வரும். முதலில் அது சோர்ந்துவிடும். அல்லது சூழ்நிலை பலனற்றதாகவோ, எதிராகவோ அமையும். கோபம் அதிகமானால், பிராணன் வேலையைக் கெடுக்கும். அல்லது நோயை உற்பத்தி செய்யும்.**

***பிராணனும் வற்புறுத்த அனுமதிக்காது.***

பிராணன் (vital) என்பது உயிர். உணர்வுக்கு உறைவிடமானது. இதன் சூட்சுமச் சக்கரம் நாபியில் மையமாக இருக்கிறது. உடல் முழுவதும் உணர்வாகப் பரவும் தன்மையுடையது. சக்தியை உடலுக்கு இதுவே தருகிறது. சக்தி மனத்திலோ, உடலிலோ இல்லை. பிராணனில்தானிருக்கிறது. க்ஷத்திரியனுக்கு வீரம் அளிப்பது பிராணன். தைரியம், வீரம், ஆவேசம் ஆகியவற்றையுடையது இது. எரிச்சல், பொறாமை, போட்டி மனப்பான்மை, தீவிரம், வேகம் ஆகியவற்றிற்கு இதுவே உறைவிடமாகும். நரம்பு இதன் அஸ்திவாரம். பிராணனுடைய உணர்வை (vital consciousness) ஜீவியம் எனவும், அதன் (substance) உறைவிடமான பொருளை நரம்பு எனவும் நாம் அறிய வேண்டும்.

Adventure of Consciousness ஜீவியத்தின் தீரம் என்ற பொருள்பட அன்னை சத்பிரேம் என்றவரை ஒரு புத்தகம் எழுதச் சொன்னார். இதை 15, 20 மொழிகளில் பெயர்த்துப் பிரசுரித்துள்ளனர். ஆசிரமத்தை வெளியுலகுக்குத் தெரிய வைத்த புத்தகம் இது. வெளிநாட்டிலிருந்து வருபவரிடம் எப்படி ஆசிரமத்தை அறிவீர்கள் என்றால், இப்புத்தகத்தைப் படித்ததால் என்பார்கள். இதில் மனமும், பிராணனும் வேறானவை என்பதைப் படித்த வெளிநாட்டார் அனைவரும் ஞானோதயம் பெற்றதுபோல் நினைத்தார்கள். நாம் மனம் என்று பிராணனை நினைத்துக் கொண்டிருக்கிறோம். அவை வேறானவை என்பது முதலில் அறியப்பட வேண்டியதாகும். யோகத்தில் ஏற்படும் தெளிவு வாழ்வில் உள்ள மேதைகட்கும் பெரியதாகத் தெரியும்.

பிராணனைக் கட்டுக்கடங்காத பிடாரி என அன்னை வர்ணிக்கிறார். அதற்கும் நியாயம், பகுத்தறிவு, முறை என்பவற்றிற்கும் தூரம் அதிகம். கோபம் அதன் கருவி பிறப்புரிமை. அது சோர்ந்தபின் அதை வற்புறுத்த முடியாது. வற்புறுத்தினால் அதிகமாகச் சோர்ந்துவிடும், அல்லது நேர் எதிராகச் செயல்பட விழைந்து கோபப்படும். இது சூட்சுமமானதால், சூழலுடன் எளிதில் கலந்து கொண்டு சூழலையே நமக்கு எதிராக வேலை செய்யும்படித் தூண்டும். சூழல் உடனே பலனற்றதாகிவிடும் அல்லது எதிர்க்கும். எதுவும் முடியாவிட்டால் பிராணன் ஸ்டிரைக் செய்ய உடலைத் துணைக்கு அழைத்து இல்லாத வியாதி இருப்பதாக நடிக்கும். திடீரென வாந்தி வரும், உடலின் பல பகுதிகளில் கொப்புளம் எழும். சூட்சுமமானவர்கள் இப்படிப்பட்டவர்களைப் பார்த்து 'அத்தனையும் வேஷம்' என்பர். அது உண்மையாகும்.

❊ ❊ ❊

**650) உடலை வற்புறுத்தவே முடியாது. அது கல்லாகச் சமைந்து நிமிஷத்தை மணியாக மாற்றும். நமக்கு வெற்றியை உடலின் ஜீவியம் கொடுத்தாலும், உடலின் பொருள் substance அறவே மறுக்கும்.**

***உடலை வற்புறுத்தினால் நிமிஷம் மணியாகும்.***

சிவராத்திரி, ஏகாதசிக்கு நாம் கண் விழிக்கின்றோம், உபவாசமிருக்கிறோம். விரதம் என்றால் சாப்பிடாமலிருப்பது, தூங்காமலிருப்பது எனப் பொருள். 14 வருஷம் சாப்பிடாமலும், தூங்காமலுமிருப்பவனே சாதிக்கக் கூடியதுண்டு என்றால் அதை ஏற்க வருபவரைப் பெரிய ஆத்மா என்பதெல்லாம் நாம் பரம்பரையாகக் கேட்டதுண்டு. உடலின் அடிப்படை இயல்பின்படி அதை வற்புறுத்த முடியாது. வற்புறுத்தலுக்கு அது இசைந்தால், பிறகு தன் இச்சையைப் பூர்த்தி செய்யவல்லது என்கிறார் பகவான். உண்ணாவிரதம்

என்றவுடன் முதல் நாளே உடல் அதிகம் சாப்பிடும், விரதம் முடிந்தவுடன், மீதியைச் சேர்த்து சாப்பிட்டுவிடும் தன்மையுடையது உடல். 3 மாதம் கண்விழித்து வேலை செய்ய உடல் இசைந்தால், அடுத்த 3 மாதம் அதைச் சேர்த்துத் தூங்கிவிடக்கூடியது உடல் என்பது பகவான் விளக்கம்.

மனம் உடலைத் தன் இஷ்டத்திற்குப் பேரளவுக்குக் கொண்டு வந்துள்ளது என்பது உண்மை. உடல் பணிந்து ஏற்றுக் கொண்டாலும், முடிவாக ஏற்றுக் கொள்ளவில்லை. உடலை மாற்ற வேண்டுமானால், அதன் பழக்கங்கள் மாற வேண்டும். உடல் திருவுருமாற்றமடைய வேண்டுமெனில் நோய்வாய்ப்பட வேண்டும். உடல் அதன் போக்கிலேயே போகும். எளிதில் மாற இசையாது. வற்புறுத்தினால் அப்படியே கல்லாய்ச் சமைந்துவிடும்.

உடலின் இருளைப் போக்கி ஒளியாக மாற்றுவதே திருவுருமாற்றம். அதைச் சாதிக்க வேண்டுமானால், உதாரணமாக நாம் சாப்பிடுவதை உடல் பழக்கமாக ஏற்றுக்கொண்டுள்ளது. முதலில் உடல் சாப்பிடும் பழக்கத்தை மறக்க வேண்டும். பிறகு சாப்பிட புதியதாகக் கற்றுக் கொள்ளவேண்டும். இருளாலான உடலின் பழக்கம் இருளில் அமைந்தது. தானாக உடல் இம்மாற்றத்தை ஏற்காது. ஒளியால் உடலை நிரப்பினால், இருள் கரைந்து ஒளியாக மாறும் பொழுது, இம்மாற்றம் நடைபெற உடல் இப்பொழுதுள்ள structure அமைப்பை விட்டு மாற, அது நோய்வாய்ப்படுகிறது. நோயால் உடலின் structure அமைப்பு பாதிக்கப்பட்டு, ஒளியை அமைப்பு ஏற்று, பழைய அமைப்பைக் கரைத்து, புதிய ஒளியால் புதிய அமைப்பு ஏற்படுகிறது. புதிய அமைப்பு புதியதாகச் சாப்பிடக் கற்றுக் கொள்ளவேண்டும். அன்னைக்கு வந்த அனைத்து நோயும் திருவுருமாற்றத்திற்காக அன்னை ஏற்றுக்கொண்டவையே தவிர நோயன்று.

110 வோல்ட்டில் வேலை செய்யும் மோட்டார் 220 வோல்டில் வேலை செய்ய வேண்டுமானால் அதனுள் உள்ள பல சாமான்களை மாற்ற வேண்டும். அதேபோல் உடலில் உள்ள உறுப்புகள் மாற வேண்டும். உறுப்புகளை அகற்றி வேறு வைக்க முடியாது என்பதால், அவற்றின் அமைப்பை மாற்றி பழைய வேலையை, புது முறையில் செய்ய அவற்றைப் பயிற்றுவிக்கவேண்டும்.



உடலை வற்புறுத்தினால் அது ஸ்டிரைக் செய்யும். அன்னை உடலின் ஜீவியத்தைத் திருவுருமாற்றம் செய்தபின் அதன் அஸ்திவாரமான உடலின் பொருள் மாற மறுத்ததால், அவருக்கு அளவுகடந்த வேதனை ஏற்பட்டது.

***

**651) தீவிரமான ஆசை தீவிரத்தையும், ஆசையின் திறனையும் இழந்தபின் உயிரற்ற ஜடமான வாழ்வாகிறது. ஆனால் அது வாழ்வை முழுவதும் ஆக்கிரமித்துக் கொள்கிறது. நம் போக்கை நிர்ணயிக்கும் திறனுள்ளது. "உன் திருவுள்ளம் நிறைவேறட்டும்" என்ற மந்திரம் நம்மை அதன் பிடியிலிருந்து விடுவித்து, ஆனந்தத்தை உற்பத்தி செய்கிறது. ஜடத்தைத் திருவுருமாற்றம் செய்ய (ஜடத்தின் ஜீவியமன்று) அன்னை எடுத்த முயற்சிக்கு "உன் திருவுள்ளம் நிறைவேறட்டும்" என்ற மந்திரத்தைப் பயன்படுத்திய விவரங்களை அஜெண்டா 12, 13இல் விளக்குகிறார்.**

*உயிரற்ற ஜடம் மாறுவது திருவுள்ளம்.*

மனிதன் இலட்சியத்தால் வாழ்பவனில்லை. பெரும்பாலானவர் வாழ்வு 40க்கு முன் முடிந்துவிடும். அதற்கு முன்னும் முடிவதுண்டு. அதுவரை வாழ்வு என்பது அவர்களுக்குக் கடமை, இலட்சியம், அற்புதம், உன்னதம், ஆச்சரியமன்று. அதுவரை ஆசை உயிரோடிருக்கும். ஆசையை அனுபவிப்பதை வாழ்வு எனக் கொண்டவர்கள் இவர்கள். வயதால் ஆசை திறனையும், தீவிரத்தையும் இழந்தால் இவர்கள் நடைப்பிணமாகிவிடுவார்கள். உயிரற்ற ஆசை, மரம் போன்ற மண்டை, சக்தியற்ற உடலுடன் வாழ்வைப் பாரமாக்கி நாளை எண்ணிக்கொண்டு இருப்பார்கள். ஆசை செயலற்றுப் போனாலும், வாழ்வு முழுவதையும் ஜீவனற்ற ஆசை ஆக்கிரமித்துக் கொள்ளும். அதுவே மனிதன் எனப்படுவது.

எந்த நல்ல காரியத்தையும் இவர்கள், "ஏம்பா, இதெல்லாம் எதற்கு, சும்மா இருக்கக் கூடாதா?" என்று எதிர்ப்பார்கள். இவர்களை நினைத்து ஏற்பட்ட பழமொழி நாற்பதிற்கு மேல் நாய்க்குணம். மிகவும் பொருத்தமாக இவர்களை வர்ணிக்கும் பழமொழி இது. இந்த நாய்க்குணம் ஓரளவு எல்லோரிடமும் இருக்கும். அதுவே நம் தவமுயற்சிக்கு எதிரி. எதிர்க்கும். ஆங்கிலத்தில் அதை preoccupation, occupation என்கிறார்கள். மனதை நிரப்பிக் கொண்டுள்ள ஜடமான வாழ்வு எனப் பொருள்படும்.

தியானம் செய்தால் இது தூங்க ஆரம்பிக்கும். நல்லதைப் பேசினால் எதிர்க்கும், சும்மா இருந்தால் அசை போடும். இதை மீற முடியாதவருக்கு வாழ்வில் எந்த நல்லதுமில்லை. இதை மீறுவது எளிதன்று. மௌனம் கரைக்கும். ஆனால் இதுவே மௌனத்தைக் தடுக்கும். நாம் என்பது இதுவாகும். முயன்று இதிலிருந்து நம்மை விடுவித்துக்கொண்டு, "உன் திருவுள்ளம் நிறைவேறட்டும்" என்றால் மயிரிழை ஜீவன் வருவது தெரியும். இதைச் சொல்ல ஆரம்பித்தால் 3, 4 நிமிஷங்களுக்கு மேல் தொடர முடியாது. நிதானமாக, விடா முயற்சியுடன் இழை இழையாக இதை வெல்ல முயன்றால் ஆனந்தம் எழுவது தெரியும்.

ஜடம் பொருளாலும் ஜீவியத்தாலும் ஆனது. ஜடத்தின் ஜீவியத்தையும் திருவுருமாற்றம் செய்வதை பகவான் மேற்கொள்ளவில்லை. அன்னை அதை முடித்துவிட்டார். அதற்கடுத்தாற்போல் ஜடத்தின் பொருள் கல்லாக, பாறையாக எதிர்த்தபொழுது "உன் திருவுள்ளம் நிறைவேறட்டும்" என்ற மந்திரம் பூவுலக இருட்டைக் கரைக்க உதவியதை அன்னை விளக்கமாக எழுதியிருக்கிறார்கள். தீராத எந்தப் பிரச்சினையும் இம்மந்திரத்தால் தீரும். இது பலிக்க நாம் ஜடம் என மனம் முதலில் ஏற்றுக்கொண்டு, பின்னர் அதிலிருந்து விலகி, சொல்ல ஆரம்பிக்க வேண்டும், அவையிரண்டும் பூர்த்தியான பின்னர் சொல்லும் மந்திரமே பலிக்கும்.

*தொடரும்...*

❋ ❋ ❋



## இம்மாதச் செய்தி

கொத்தடிமை நிலத்தைக் கொத்துகிறான். ஆசைக்கு அடிமைப்பட்டவன் கண்ணைப் பாசம் மறைக்கிறது. அறிவை இழந்த அடிமை சொந்தச் சிந்தனையை இழக்கிறான். ஆத்மா பரமாத்மாவுக்கு அடிமையாக விழைகிறது. இருளில் மூழ்கிய ஆன்மாவுக்கு அன்பால் அபிஷேகம் செய்ய பரமாத்மா அவனைத் தேடி அடிமையாக அலைகிறார். பக்தியால் பவித்திரமடைந்த ஆன்மாவை அன்னையுருவு கொண்டு அடிமையாக ஏற்கும் பாங்குதான் மனித ஜீவனை அவதாரமாக்கும் யோகசித்தியாகும்.

The physical slave drudges for the Master.

The emotional slave is infatuated.

Slavery of the mind is indoctrination.

Soul offers its slavery to the Mastersoul.

The greatest of slaves is the Divine who chases the soul in bondage to saturate him with Divine Love. The Mother in the devotee anoints the baktha with divine love by accepting his slavery. This makes Her being the true Divine Mother.

❋ ❋ ❋

### ஜீவிய மணி

ஞானம் சிருஷ்டியில் லயிப்பதால் காலம் ஏற்பட்டது.

# லைப் டிவைன்

கர்மயோகி

## IX.The Pure Existent

Normally our existence is a preoccupation. It is an egoistic preoccupation. Such interests are limited and fleeting. Having withdrawn from such a preoccupation, we become curious to know. Now that we are dispassionate, our search is only for the Truth. First, we perceive a boundless energy. We see that energy pouring itself out in limitless Space and in eternal Time. It is an existence, that infinitely surpasses our ego or any ego. We find that first result as an infinite existence, infinite movement and infinite activity. That existence surpasses even the collective ego. The great creations of long centuries are, to that existence, but the dust of the moment. The numberless myriads of earths are only a petty swarm in its incalculable sum. Man's actions and feelings are instinctive. He becomes aware of this stupendous world movement. He fashions his life thoughts with respect to it. He presumes it is there for his benefit to help or harm. He places himself instinctively at its center. He conducts himself as if his own egoistic cravings, emotions, and ideas are to be fulfilled by this movement. He takes it for granted and even considers his needs its chief concern. On closer scrutiny, we discover it exists for itself, not for us. Its aims are gigantic, its ideas are complex and boundless. The desire or delight it seeks to fulfill is vast. It looks down on our pettiness with an ironic smile, as its own standards are immense and formidable. It is likely to send us to the other extreme to consider ourselves as insignificant. It can emerge in us as a too positive idea, which is again not true. That too would be an act of ignorance. That would shut our eyes to the great facts of the universe.



We are face to face with a boundless movement, *hrdaya samudra*. Naturally, we think we are insignificant. The truth is, this movement does not consider us unimportant. From Science we learn how important we are to the whole, how important the infinitesimal is to the infinite. The care of the whole for the minute detail is great. Its devices are very cunning so as to meet the needs of each detail. On the smallest of its works the Whole pours an intense absorption, even as on the largest. The mighty energy is an equal and impartial mother, *samam brahma*. So speaks the Gita. It remains infinite because the great energy gives the same intensity and force of movement to the fashioning of the solar system and the organisation of the anthill. **The Infinite is infinite only when it is equal in the finite as well as the infinite.** Should its treatment vary, it becomes the finite. The difference in the size creates the idea that one is great and the other is small. We know it is the illusion of size. This is an illusion of quantity. Instead, let us look at the force of quality. Then, certainly the animate ant is superior to the inanimate solar system. Then man, by the same argument, is superior to all Nature put together. As before, this is a superiority of quality.

If the difference in sizes does not make one more important than another, how can the difference in quality do so? It is an illusion of quality here. Let us go behind the quantity and quality. We find the same Brahman dwelling in both. That Brahman dwells in both equally. Here we consider the intensity of the movement of which quantity and quality are only expressions. This gives us an insight. We find Brahman is equally partaken by all in its being. Brahman is equally distributed to all in its energy. Again, this too is an illusion of quantity. Brahman dwells in all. It is indivisible. Yet, it appears as if it is divided and distributed. Let us change our perception. As we have a consciousness, this infinite energy has a consciousness of its own. That is not our human consciousness. It is different. That consciousness is indivisible. It gives equally

to all. It does not give an equal part of itself to all. It gives its whole self at one and the same time. It does so to the solar system as well as to the anthill. To the Brahman there is no whole and its parts. Each thing is all in itself. Each thing benefits by the whole of the Brahman. Quantity and quality differ, but self is equal. The form varies, the manner varies, the result of the force of action too varies. But the energy in all is eternal, primal, infinite. To make a strong man, a force of strength is needed. Here the strong man emerges as the force is expressed. A force of strength is needed to make a weak man. Here the strength is suppressed to make the weak man. But the original force in both is equal. This is true of affirmation and negation; silence and sound.

We have a first reckoning to mend. We know of this infinite Movement. We see this energy of existence. This is the world, ourselves. Our present account is false. We are infinitely important to the ALL. But to us the ALL is negligible. We alone are important to ourselves. This is the sign of original ignorance. This is also the root of the ego. Ego thinks as if it were the ALL. It thinks with itself as the center. The ego does not recognize the rest. It accepts from them what it is mentally disposed to accept. Or, it accepts some, compelled by the circumstances. The shocks of the environment force the ego to accept the rest. Sometimes the ego begins to philosophise. There it asserts that the world exists only in it and by its consciousness. It knows its own states of consciousness. It has several mental standards. For the ego these are its tests of reality. It considers false whatever is outside of its view. To the ego, the outside world is non-existent. This is mental self-sufficiency. This creates the false accounting. Life has a fuller value than we know. We do not know all the right values of life. Our false account prevents us from enjoying life fully as it is. There is a truth on which the ego rests. The ego is a pretension of the human mind. Presently that truth does not emerge. When the mind knows its ignorance, it can emerge.



Then the ego must submit to the ALL. That way the ego would lose its separate existence. We call the results and appearances ourselves. It is not really we, but a partial movement of this infinite Movement. We must recognize the Infinite. We must recognize it consciously and fulfil it faithfully. That is the beginning of a true living. Having recognized our true selves, we must see that we are one with the total movement. We are not the minor or subordinate movement. This is the other side of the account. Further, this realization must be expressed in the manner of our being. Our thoughts, emotions and actions also must express this new experience. Thus, the true living we commenced will be culminated now.

This will not settle the account. For that, we have to know what is this ALL, this infinite and omnipotent energy. Here we come to a fresh complication. The Movement does not seem all. Perhaps there is more. Pure Reason as well as Vedanta think so. They feel that this Movement itself is subordinated to a stable something. They call it *Sthanu*. It is a spaceless, timeless Stability, they say. Also it is, they say, immutable, inexhaustible, unexpended. It contains all action, but does not itself act. It is not energy, but pure existence. There are those who see only this world energy. To them there is no stability. They would readily say that there is no such thing as stability. To them, stability is a fiction. People have a false idea of the stable and build an intellectual conception on it. Therefore, the conception too is false. They say it is man's device to act successfully. All is a movement, stability is an artifice of the mind. So they dismiss the idea of stability. It is not difficult to prove this. One can show that there is nothing stable. Something may appear stationary, but on examination we find it is not stationary, but only a certain movement which is blocked. Its appearance is still, while it is itself moving. The analogy of a moving train will do. The train runs. The landscape around is still. But we feel the train is still and the landscape is running. What then is the truth?

What about the underlying movement? Is it immutable? Does it move? Is it moveless? Is existence only energy? Or, does energy issue out of Existence?

There is an Existence. If there is one, it is like the energy. As the energy is infinite, so this Existence is infinite. The finite must have an end and a beginning. Reason says there is no terminus. Beyond the terminus, there is something. There is no beginning. Before the beginning, something is there. If there is no beginning and no end, it is not finite but is an infinite. Experience and intuition confirm this view of pure Reason. There is no absolute end or absolute beginning. It is a contradiction, a violence, a fiction. Infinity has a self-existence. Finite is the appearance. Infinity imposes itself on the appearance of the finite. So what appears to be finite, is really infinite.

What we considered here is infinity in Time and Space. Time and Space too can disappear revealing the Reality. We explain by mind and use speech as an instrument. Reality lies beyond mind and speech. The opposition and contradiction we see are from the mind. Beyond the mind there is no contradiction. There is only identity. Pure Reason goes further than Time and Space. Its own light is colourless and austere. There we see Time and Space are two categories in which we arrange our perceptions of phenomena. Let us look at existence itself. Time and Space disappear. The extension is not spatial, but psychological, i.e. our mind imagines space. There is no duration; it is only an extension of our mind. Now we see those extensions are not real. They are only symbols. These symbols represent something that cannot be described. It is an eternity. It cannot be translated into words. No intellectual term can lay hold on it. This eternity is all-containing. It is an ever-new movement. It is an infinity. It is all-containing, all-pervading. It is a point, but a point without magnitude. This is a conflict of terms. It is a violent conflict. Yet it accurately expresses what we



perceive. From this we understand speech is out of bounds here. We see mind has crossed its own domain. Mind is trying to explain a Reality beyond its scope. Mental conventions disappear here. Mind works through oppositions. It is necessary for the mind. Here that necessity is no longer there. All that we have is an ineffable identity.

Is this true? Maybe something else is true? We said mind and speech are not real. Maybe the existence is not real. It may be a fiction of mind. It may be a Nihil. Maybe it is created by speech. Or, are we trying to create a concept? Could this be a reality of that concept? Therefore, it may disappear. So, we go to the bottom. We think of Existence in itself. We do find something behind. It is real. It is infinite and indefinable. No phenomenon is absolutely real. Not even the totality of phenomena is real. Phenomenon is only phenomenon. We can reduce all phenomena into one. It can be universal or fundamental. After all, it is all phenomenon of energy, its movement. They cannot be so reduced. When reduced, we will get another phenomenon. Again will it be indefinable. Let us examine it further. We speak of movement. Logic requires its opposite of repose. We can speak of light. Immediately darkness arises. So, when we speak of movement, its opposite repose arises. Earlier we said this was absolute energy. Now we say it is in repose, in inaction. What, then, is it? It is absolute existence. Before us we have two alternatives. One is indefinable, pure existence or indefinable energy in action. Can we say the latter alone is true? If so, does it mean energy is the result of action? In that case, energy is a phenomenon and a result. Then movement alone exists. Existence will not be there. We land in the Nihil of the Buddhists. Existence becomes an attribute. It is the attribute of Movement, Karma, Action. They are all eternal phenomena. Now pure reason wakes up. It finds this conclusion unreal, unacceptable, contradictory to its fundamental seeing. Therefore, reason says it cannot be. Thus

we arrive at an impossible position. The stair of ascent ceases. It leaves the whole stair suspended.

We see this Existence. We find it indefinable, infinite, timeless, spaceless. If it is so, what is it? It is pure absolute. It cannot be summed up in any quantity or quality. It does not contain any quality. No form can express this absolute. No form can be its foundation. Suppose forms, qualities and quantities disappear from this world, this Existence would remain, because it is an absolute. Existence without quality, quantity, or form is conceivable. Not only that; it is the only thing we can conceive of behind the phenomena. When we say Existence is without form and quality, etc. we mean Existence exceeds them. It means Form, Quality, and Quantity pass into Existence and then disappear. If they choose, they can again emerge out of it. We must take care to note while disappearing they do not go into *ONE* form, *ONE* quality or *ONE* Quantity. There is no such thing. They all pass into something which cannot be described by form, quantity, etc. We think of conditions and appearances of the movement. They have emerged out of That. Now they pass back into it. While in movement they are called Form, Quality, and Quantity. These are names appropriate to them while in the movement. Once they pass back into That, they can no longer be called again Form, Quality or Quantity. Therefore, we call pure existence as an Absolute. It is unknowable by thought. However, we can go back into it by identification. That is a supreme identity. It transcends the various types of knowledge we know of. Movement is opposed to the Absolute. It is in the field of the relative. We define relative as contained in the Absolute. All things in the movement are relative. All of them are contained in the Absolute. All of them are the Absolute. Vedanta illustrates the relation of the Absolute to the relative by ether. There are phenomena of Nature. There is the fundamental ether. Ether is contained in the phenomena. Ether constitutes them. Ether contains them. When the



phenomena enter the ether, they disappear. They are no longer what they were. This is identity in difference between the Absolute and the relative.

Forms disappearing into That is a language of human consciousness. It is called temporal consciousness. Human language used to describe non-human states will land us in illusions. We must guard against those illusions. Movement emerging from stability is an eternal phenomenon. We cannot conceive of it. It is a beginningless, endless, ever-new movement. It is the eternity of the Timeless. Our notions and perceptions cannot conceive it. They can conceive of a Time-eternity. Time-eternity is of successive movements. It is of successive durations. Our ideas of beginning, middle and end are attached to Time-eternity. Therefore, man speaks of Timeless-eternity in terms of Time-eternity. Time-eternity is recurring.

We may say this is the character of pure reason. Only when we accept reason, we enter into these confusions. But we are not obliged to accept reason. We can conceive of existence by mental conception through reason. But, that is not the only way. We can see the existence not using the mind or reason. We can use the purest and freest form of insight. It shows us that existence is only movement, and nothing but movement. Two things alone exist. One is movement in Time and another is movement in Space. One is subjective and the other is objective. Extension is real, duration is real. Space and Time are real. Between Time and Space, we can somewhat manage Space but not Time. This is so because Space is objective and outside us. Time is subjective and inside us. The mind can attempt to make existence manageable by going behind Space. Behind we see the indivisible whole is distributed by the divisible Space. Space divides because it is conceptual. Time is the very stuff of our consciousness as it is inside and subjective. We cannot go behind Time. We are a

movement. It is continual and progressive. The world too is a similar movement. These movements increase by the inclusion of the past. The past represents itself to us as the beginning. We mistake it as the beginning of all future. It is a beginning, a present which always eludes us. It eludes us because it is NOT a beginning. It perishes before it is born. What is, is eternal. This is indivisible succession of Time carrying on its stream an indivisible movement of consciousness. It is a progressive movement too. The eternally successive movement is change in Time. It is Duration. It is the sole absolute. Becoming is the only being.

We have this actual insight into being. We have conceptual fictions of pure Reason. We see an opposition between them. The opposition is not real. We confidently support conceptual reasoning against fundamental insight. We cannot afford to do it, if intuition and reason are opposed. Our resort to intuitive experience is incomplete. Intuitive experience is right only in the beginning. It must be completed by the integral experience. When we stop in the middle, it goes wrong. Intuition now fixes itself on the Becoming, the movement. So we see ourselves as a movement. We see our consciousness changes in succession of Time. We are the river, the flame of the Buddhist. The supreme experience is yet further. It is a supreme intuition. By that we can go behind the surface self. From there we change our perceptions. There we see this change is not just a change. Here we see that this change is a mode of our being. That Being is not involved in our becoming. That is stable and eternal. We can have the intuition of That. We can have a glimpse of it in experience behind the veil of things. We can also draw back from the fleeting becoming and live in it eternally. It can also effect a change in our external life. It can change our attitude. Our own actions upon the movement of the world can be changed by our living behind the veil in that stability. Pure Reason has already given us this stability. We can also arrive at that



stability without the help of that Reason. We can reach that stability with no previous knowledge. It is pure existence, eternal, infinite, indefinable. It is not affected by the succession of Time. It is not involved in extensions of Space. It is beyond form, quantity and quality. It is Self, and only Self. It is absolute.

The pure existent is then a fact and no mere concept. It is the fundamental reality. But let us hasten to add that becoming is also a reality. Energy and movement are, of course, realities. The supreme intuition may go beyond the Movement. Its experience may correct the other experience. It may go beyond, may even suspend it. But the experience of movement is not thus abolished. So, we have two fundamental facts. Pure Existence and world-existence are the two. They are the Being and Becoming. To deny the one or the other is easy. But we should recognize the facts of consciousness - of Being and Becoming - and find out their true relation. This is the true and fruitful wisdom.

We cannot, at least our minds cannot have a direct experience of the Absolute. At best we can have only mental representations of the Absolute. Mental representations are psychological representations. Stability and movement; Oneness and multitude are such mental representations. The Absolute does not bind itself by any of them. None of these states can describe the Absolute in their terms. It is Absolute because it is beyond stability, oneness, etc. But, the Absolute takes its eternal poise in the one and the stable. Also the Absolute whirls around itself. It does so infinitely, inconceivably, securely. It does so moving in the multitudinous. World existence is the existence in movement. It is the ecstatic dance of Shiva. The dance multiplies the body of the God. Those bodies are numberless to our view. The one and stable moveless existence is a white existence.

The dance leaves it where it was, as what it was. It ever is and ever will be. Its sole object in dancing is the joy of dancing.

We cannot think out the Absolute in itself. It is beyond stability and movement. It is beyond unity and multitude. It is not our business, either. We must accept the double fact of Shiva and Kali. We must seek to know the relation between them. There does exist a relation between Shiva and Kali. It is the relation between the movements in Time and Timelessness. Of course, it is a measureless Movement. We must understand them in regard to the timeless, spaceless, pure Existence. That Existence is one and stable. We cannot apply our measures to this Existence. Nor can we apply the measurelessness to it. We have seen what pure Reason, intuition and experience have to say about pure Existence, the Sat. Next we must inquire into what they all have to say about Force, Movement and Shakti.

We have a first question to ask. Whether Force is simply force, is that question. Is Force an unintelligent energy of movement? Or, is the Force a power of the consciousness? Because consciousness seems to emerge out of the Force. That is our experience in this material world of ours. To put it otherwise, is Force a phenomenal result of consciousness or the secret nature of consciousness? Vedanta says Prakriti is simply Force or Force is simply Prakriti. It is only a movement of action. It is a process. Our question is whether Prakriti is really a power of Chit, whether Prakriti is in its nature a force of creative Self-conscience. On this essential problem all the rest hinges.

❊ ❊ ❊





## P. 17. Or hew the ways of Immortality

**அமரத்துவமான சுவர்க்கத்திற்குப் பாதை அமைப்போம்**

காயகல்பம், சாகா வரம், மரணமிலாப் பெருவாழ்வு, அமரவாழ்வு என்பவற்றை மனிதன் சாகாமல் என்றும் உடலில் உயிரோடிருப்பான் எனக் கொண்டு இந்திய தவசிகளும், ரிஷிகளும் காயகல்பம் தேடினர்.

வேதம் அமரத்துவம் என்பதைத் தெளிவாகக் கூறுகிறது.

- **அமரத்துவம் ஆத்மாவுக்கு, உடலுக்கோ, உயிருக்கோ (ஆவி)யில்லை.**
- **அமரத்துவத்தின் இரு அம்சங்கள்** infinity **அனந்தம்,** universality **பிரபஞ்ச முழுவதும் பரவுவது.**
- **அனந்தம் எல்லா நிலைகட்கும் உண்டு. ஜடம், வாழ்வு முதல் சத்வரை அனந்தம் உண்டு. ஆனால் அமரத்துவம்** supreme infinity**க்கே உரியது.** supreme **என்பதை “பர” என்று குறிப்பதுண்டு.**
- Universality **பிரபஞ்சம் முழுவதும் பரவுதலும் எல்லா நிலைகட்கும் உண்டு.**
  **அமரத்துவம்** Divine universality**க்கேயுண்டு.**
- **ஆன்மா இவையிரண்டையும்** - (Supreme infinity, divine universality) **உச்சகட்ட அனந்தமும், இறைவனுக்குரிய பிரபஞ்சரூபமும் - பெற்றால் அமரத்துவம் பெறுகிறது என்பது வேதம்.**

சாவித்திரி கூறும் அமரத்துவம் உடலில் வாழும் மனிதனுக்குரியது. உலகுக்குப் புதிய கருத்து. சாவித்திரி எமனை வென்று, அழித்து, மரணத்தை அழித்து உலகுக்கு அமரத்துவம் வழங்கவந்தவள். அதைச் சாதித்தாள்.

இந்தப் பக்கத்திலுள்ள இதர கருத்துகள்:

- *எமனெனும் கருமேகத்துடன் போரிட வந்தவள் சாவித்திரி.*
- *மரணம், வீழ்ச்சி, சோகம் ஆன்மாவை நோக்கி உந்தும்.*
- *ஆயுதம் தாங்கிய அமரத்துவம் காலத்தின் கிடுக்கிப்பிடியை சமாளித்தது.*
- *ஜடத்தின் இருளில் வாழ்வின் சிறு போராட்டம்.*
- *தம் வலுவே எதிர்ப்புக்கு அளவுகோல்.*
- *தெய்வீக அம்சங்களைத் தாக்கினான்.*
- *ஆர்வம் நிறைந்த மனித இதயத்திற்கு அவளிதயம் துணை நின்றது.*
- *விதியின் திரையில் விளையாடும் உருவம்.*
- *தெய்வீக விளையாட்டின் வெற்றியும், தோல்வியும்.*

❊ ❊ ❊

## ஸ்ரீ அரவிந்த சுடர்

வலிமை பிறப்போடு வருகிறது. அல்லது அனுபவத்தால் வருகிறது. அவ்வலிமையை வேறு வகையாகவும் பெறலாம். அடிப்படையில் வலிமையும், எளிமையும் ஒன்றே என்றறிந்தால், இரண்டும் 'பிரம்மம்' என்று உணர்ந்தால், வலிமை வரும்.

*வலிமையான பிரம்மம் எளிமையாகவுமிருக்கும்.*





## Vol I P. 38 Renounce pleasure to express Ananda

### ஆனந்தம் வெளிப்பட சந்தோஷத்தை மறக்க வேண்டும்

வலியும், சந்தோஷமும் எதிரெதிரானவை என்பது தெளிவு.

சந்தோஷமும், ஆனந்தமும் எதிரெதிரானவை என்பது புரிவதில்லை.

காவல்காரன் திருடலாம். திருடிப் பெறுவதே அவனுக்குச் சந்தோஷம். அவனுக்குச் சம்பளம் உண்டு. சம்பளம் சப் என்றிருக்கும். திருட்டில் ருசியுண்டு. திருட்டுப் பழக்கமுள்ள காவல்காரனுக்கு வேலை கிடையாது.

**சந்தோஷம் என்பது உணர்வு பெறுவது.**

**ஆனந்தம் ஆன்மா உணர்வது.**

**வாழ்வில் வலி – சந்தோஷம் – ஆனந்தம் கலந்துள்ளது.**

**சிறிய தவற்றை மனம் நாடினால் வலி கிடைக்கும்.**

**சிறிய நல்லது சந்தோஷம் தரும்.**

**பெரிய நல்லது ஆனந்தம் தரும்.**

தவறில்லை என்றாலும் எந்த நேரமும் சிறிய சௌகரியம் சுலபமாக இருக்கும். அது உடனே வரும். பெரிய நல்லது தற்சமயம் தொந்தரவாக இருக்கும். நாளாவட்டத்தில் பெரும் பலன் தரும். மனம் சிறிய நல்லதைத் தேடும். அது சந்தோஷம்.

- *சந்தோஷம், pleasure, உள்ளவரை ஆனந்தம் உள்ளே வாராது. ஆசையின் சுவடுள்ளவரை ஆனந்தமில்லை என்றார் அன்னை. ஆசை சந்தோஷம் தரும், ஆனந்தம் தாராது.*

பிற்காலத்தில் பெரிய மனிதர்களாக வந்தவர்களைப்பற்றிக் கேள்விப்படுகிறோம்.

“சிறு வயதிலியே அவன் எங்களோடு விளையாட வரமாட்டான். படம் போட்டுக் கொண்டிருப்பான். இப்பொழுது பெரிய ஆர்டிஸ்டாகிவிட்டான்”.

“கிரிக்கெட் மேட்சுக்கு வாராதவர்கள் ஹாஸ்டலில் எவரும் இல்லை. இவன்மட்டும் வரவில்லை என அன்று கேலி செய்தோம். இன்று பிரபலமான செஸ் விளையாட்டுக் - காரனாகிவிட்டான்”.

ஒரு வீட்டில் 7 குழந்தைகளில் 2 பையன்கள், 5 பெண்கள். அக்குழந்தைகளின் தூரத்து உறவினர் செல்வர். அவர் ஒரு பெண்ணுக்கு அத்தனைச் சொத்தையும் கொடுத்தார். ஏன் என எவருக்கும் புரியவில்லை. “சிறு வயதிலேயே அக்குழந்தையை எனக்குப் பிடிக்கும். மற்ற குழந்தைகள் போலி ருக்கமாட்டாள்” என்று பிற்காலத்தில் விளக்கம் வரும்.

- **‘அன்னையை ஏற்றுக் கொள்’ என்று அடிக்கடி கூறுகிறீர்களே, அப்படி என்றால் என்ன? என்று சில சமயங்களில் கேள்வி வரும். ஒருவர் ஐரோப்பா சென்றார். விமானத்திலிருந்து இறங்கியவுடன் ஊர் பேரமைதியாக, அழகாக, ஒழுங்காக இருப்பதைக் கண்டார். ஆனால் உடலெல்லாம் அருவருப்பாக இருந்தது. Lower vital vibration சிறுபிள்ளைத்தனமான, அசிங்கமான உணர்வு உடலில் ஏற்பட்டது. அவர் திரும்பிவந்தபொழுது நம் ஊரிலிருந்து ஆசிரமம், தியானமையம் போனால் என்ன மாறுதல் உண்டோ, அது மேல்நாட்டுக்கும் நமக்கும் உண்டு என்றார். மேல் நாட்டார் நம் நாட்டின் ஆழ்ந்த அழகான உயர்ந்த இனிமையான அமைதியை நாடி நரம்பில் உணர்ந்துவிட்டால் திரும்பிப் போகப் பிரியப்படுவதில்லை.**

❊ ❊ ❊



## அன்பர் கடிதம்

*ஸ்ரீ அன்னை, ஸ்ரீ பகவான் அவர்களை வணங்கிக்கொண்டு அவர்களின் திருவடியில் இந்தக் கடிதத்தைச் சமர்ப்பிக்கின்றேன்.*

என்னுடைய சகோதரியின் குழந்தைக்குத் (ஸ்ரீ வர்ஷா) திடீர் என்று உடல்நிலை பாதிக்கப்பட்டது. உடலில் சில இடங்களில் திட்டுத்திட்டாகக் கருப்பாக உடலில் தழும்பு போன்று தோன்றியது. அதனைப் பார்த்த வீட்டில் உள்ளோர் ஏதாவது பூச்சிக் கடியாக இருக்கும் என்று கூறிவிட்டனர். குழந்தையை checkupக்குக் கூட்டிச் சென்றபோது டாக்டர்கள் checkup செய்துவிட்டு இது பூச்சிக்கடி இல்லை, இரத்தம் உரைதலில் பிரச்சினை என்று கூறி ஒரு specialist இடம் அனுப்பினர். அவர்களும் பரிசோதித்துவிட்டு குழந்தை ஆபத்தான நிலையில் உள்ளது உடனடியாக Child Trust அல்லது Apolloவில் அட்மிட் செய்து விடும்படிக் கூறினர். மேலும் அங்கெல்லாம் சென்றால் அதிகப் பணம் ஆகும் என்று கூறி Children Hospitalஇல் சேர்த்துவிடும்படிக் கூறினார். ஆனால் அந்த hospitalஇல் சுத்தம் கிடையாது அதுதான் பிரச்சனை என்று கூறினார். வேறு ஒருவரிடம் கேட்டதற்கு அங்குச் சேர்த்தால் தொற்றுநோய் போன்ற வேறு ஏதாவது பிரச்சனை வந்தால் என்ன செய்வது என்று கூறினார். என்ன செய்வது என்று எல்லோரும் குழம்பினர். வீட்டிற்கு வந்தவுடன் அனைவரும் அன்னையிடம் பிரார்த்தனை செய்தோம். பிறகு அக்காவின் கணவர்க்கு - மாமாவுக்குத் தகவல் தெரிவித்தோம். அன்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் மறுநாள் hospitalக்கு அழைத்துச் செல்லலாம் என்று முடிவெடுத்தோம். அடுத்த நாள் Child Trust Hospital சென்று checkup செய்தோம். Doctors எல்லா testஉம் எடுக்க வேண்டும் என்று கூறி ஒவ்வொரு testக்கும் எழுதிக் கொடுத்துவிட்டனர். Resultஐப் பார்த்து விட்டு மறுநாள் வரச் சொன்னார்கள். சரி என்று எல்லோரும் வந்துவிட்டோம். ஏதோ சாதாரண பிரச்சனை என்று இருந்துவிட்டோம். அந்த resultஇல் bloodஐப் பற்றிச் சில

குறிப்புகள் இருந்தன. என்னுடைய சகோதரன் Biochemistry படித்தவன். Reportஐப் பார்த்தவுடன் ஒன்றும் இல்லை என்று கூறிவிட்டு என்னை மட்டும் தனியே அழைத்துசென்று குழந்தையின் blood groupஇல் சில சிக்கல் உள்ளது. அதனைத் தீர்ப்பது மிகமிகச் சிரமம், குழந்தையை நம்மால் காப்பாற்ற முடியாது, கடவுள்தான் காப்பாற்ற வேண்டும். தயவுசெய்து இந்த உண்மையை யாரிடமும் கூறிவிடாதே என்று சொல்லிவிட்டான். எனக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. யாரிடமும் எதுவும் சொல்லாமல் அன்னையிடம் பிரார்த்தனை செய்ய ஆரம்பித்தேன். மறுநாள் நான் என் அப்பா, அம்மா, குழந்தை, அக்கா, மாமா அனைவரும் Child Trust Hospitalக்குச் சென்றோம். டாக்டர்கள் கிட்டதட்ட 4 மணி நேரம் பரிசோதித்துவிட்டு குழந்தையை அட்மிட் செய்துவிடுங்கள் குழந்தை கடும் பிரச்சனைக்குரிய நிலையில் இருக்கிறது என்று கூறிவிட்டார்கள். மேலும் சில test எடுக்க வேண்டும். அந்த resultஜ வைத்துத்தான் எந்த முடிவும் எடுக்க முடியும். அந்த வசதி இந்த hospitalஇல் இல்லை எனவே அதனை வெளியே வேறு hospitalஇல் செய்ய வேண்டும் என்று கூறிவிட்டனர். Test நாளை காலையில் செய்ய வேண்டும் என்றும் கூறினர். கையில் வைத்திருந்த பணம் செலவழிந்துவிட்டது, hospitalஇல் அட்மிட் செய்தாகவேண்டும் என்ன செய்வது என்று தெரியாமல் விழித்துவிட்டு அன்னை நமக்கு வழி காட்டுவார் என்று கூறி வீட்டுக்குச் சென்று பணம் எடுத்து வருகிறேன் என்று நான் வீட்டுக்கு வந்தேன். வீட்டில் உள்ள பணம் அனைத்தையும் சேர்த்தால் தேவையான அளவு பணம் இருந்தது. எடுத்துக்கொண்டு hospitalக்குச் சென்று பணம் கட்டினோம். மாலை 6 மணிக்குத்தான் room கிடைக்கும் என்று கூறிவிட்டனர். மாலை 3 மணி சுமாருக்கு doctor எங்களை அழைத்து test எடுக்க வேண்டும், அதனை Apollo hospitalஇல் செய்ய வேண்டும், அதற்கான letter இது. இதனைக் கொண்டு போய் கொடுத்து test tube வாங்கி வாருங்கள் என்று கூறினார். அந்த letter blood groupஇல் உள்ள factorsஐப் பற்றிக் குறிப்பிட்டு இருந்தனர். அதன் குறியீடு இருந்தது. நானும் என் மாமாவும் hospital சென்று



coagulation lab test tube வாங்கிக் கொண்டு எவ்வளவு ஆகும் என்று கேட்டோம். Cash counterஇல் கேளுங்கள் என்று கூறினர். அங்கு போய் கேட்டால் 4855 ரூபாய் ஆகும் என்று கூறினர். எனக்கும் என் மாமாவிற்கும் என்ன செய்வது என்றே தெரியவில்லை. ஏற்கனவே ஏகப்பட்ட செலவாகிவிட்டது, பணத்திற்கு என்ன செய்யப் போகிறோம் என்று குழம்பிப் போய்விட்டோம். பணம் bankல் எடுக்கவேண்டும் என்றால்கூட நாளை 12 மணி ஆகிவிடுமே, 8½ மணிக்கு test ஆச்சே அப்பாவிடம் கூறியவுடன் எப்படியாவது சமாளிப்போம் அன்னை வழி காட்டுவார் அன்னைக்கு நம் நிலைமை தெரியும், கவலைப்பட வேண்டாம் என்று கூறினார். அவரே பக்கத்து வீட்டிற்கு phone செய்து என் மற்றோர் சகோதரியிடம் பேசினார். பணத்திற்கு ஏற்பாடு செய்யும்படிக் கூறினார். நான் வீட்டைவிட்டுக் கிளம்பும்போது வீட்டில் 200 ரூபாய்தான் இருந்தது. அருகில் உள்ளவர்களிடம் அதிகப் பழக்கம் கிடையாது. என்ன செய்வது அன்னையே நீங்களே அருள் புரிய வேண்டும் என்று பிரார்த்தனை செய்து கொண்டேன். இரவு 8½ மணிக்கு நான், என் அப்பா, என் மாமா அனைவரும் வீட்டிற்கு வந்தோம். வீட்டில் நுழைந்தவுடன் என் அக்கா பணம் கிடைத்துவிட்டது என்று கூறினார். எப்படி என்று கேட்டேன்? அருகில் உள்ள தியான மைய அன்பர்களிடம் உதவி கேட்டதாகவும், அவர்கள் உங்கள் எதிர்வீட்டில் உள்ள ஒரிசாக்காரர்களிடம் கேளுங்களேன் என்று கூறி உள்ளார்கள். எதிர்வீட்டார்கள் ஹிந்தி பேசுபவர்கள். அவர்கள் தீவிரமான Mother பக்தர்கள். அவர்களுக்கும் எங்களுக்கும் ஒருவர் மேல் ஒருவர் மிகுந்த மரியாதை உண்டு. நாங்கள் பேசினால் Mother பற்றி மட்டுமே ஒருவர் மொழியில் ஒருவர் பேசுவோம். அவர்களிடம் என் சகோதரி போய் பணம் 5000 ரூபாய் கேட்டார்கள். அவர்கள் எங்கள் நிலையை உடனே புரிந்துகொண்டு பெட்டியைத் திறந்து 50ரூபாய் கட்டு ஒன்று எடுத்துக் கொடுத்தனர். Mother அருள் புரிவார் என்று சைகை பாஷையில் கூறி அனுப்பினர். இதனை அக்கா எங்களிடம் கூறியபோது மதருக்கு நன்றி கூறி factor result நல்லபடியாக வரவேண்டும் என்று பிரார்த்தனை செய்தோம். யாருக்கும் தூக்கமே

இல்லை. அடிக்கடி இரவில் அன்னையிடம் பிரார்த்தனை செய்தோம். மறுநாள் testக்கு blood எடுத்துச் சென்றனர். Doctorகள் மாறிமாறி குழந்தையைப் பரிசோதித்தனர். இரண்டுநாளில் குழந்தை மிகவும் இளைத்துவிட்டது. சிரிப்பே இல்லை. அதிகமாக அழ ஆரம்பித்தது. யாரைப் பார்த்தாலும் கதறி அழுதது. எங்களால் அதனைத் தாங்கவே முடியவில்லை. வீட்டில் அனைவரும் அழுதுவிட்டனர். பின்னர் அனைவரும் மனத்தைத் திடப்படுத்தி அன்னை எப்படியும் குழந்தையைக் காப்பாற்றுவார் என்று நம்பினோம். வீட்டிற்கு வந்தவுடன் இதுவரை வந்த resultஐ என் தம்பியிடம் காட்டி கேட்டபோது அவன் முகத்தில் வேதனைக் கோடுகளைப் பார்க்க முடிந்தது. எல்லோரும் மிகுந்த துயரமும் கவலையும் அடைந்தோம்.

அன்னையின் திருவுருவப் படம் முன்பு மிகுந்த வேதனையோடு பிரார்த்தனை செய்தேன். அன்னையின் திருவுருவப்படத்தைப் பார்த்துக்கொண்டு இருந்தபோது மனத்தில் திடீர் என்று **'அறிவை நம்பாதே'** என்ற வாசகம் நினைவிற்கு வந்தது. இனி doctor சொல்லுவது, என் தம்பி கூறுவது மற்றும் result report எதையும் நம்பப் போவது இல்லை. அன்னை எப்படியும் குழந்தையைக் காப்பாற்றி விடுவார் என்று உறுதியாக நம்பினேன். மனத்திற்குப் புது ஒளி கிடைத்ததுபோல் இருந்தது. என் சகோதரியிடம் அன்னையின் கைகள் குழந்தையின் உடலில் இரத்தம் உறைந்த இடத்தில் தடவுமாறு கற்பனை செய்யுங்கள், வெள்ளொளி குழந்தையை சூழ்ந்து இருக்குமாறு செய்யுங்கள், குழந்தையிடம் சாவித்ரி புக்கைப் படித்துக் காட்டுங்கள், என் அம்மாவிடம் மதர்ஸ் ஸர்வீஸ் சொசைட்டியால் வெளியிடப்பட்ட அருளமுதம் புத்தகம் படியுங்கள் என்று கூறினேன். நானே அந்தப் புத்தகத்தை எடுத்து திடீர் என்று திறந்து படித்தேன். அதில் தொந்திரவான பிரச்சினை என்ற தலைப்பில் தொந்திரவான பிரச்சினை வந்தபோதும் அன்னையை நினைவு கூர்ந்தால் அன்னையால் மாற்ற முடியாது எதுவும் இல்லை என்பதை எப்போதோ பென்சிலில் கோடு கிழித்து இருந்தேன். அதைப் பார்த்தவுடன் மேலும் நம்பிக்கை அதிகரித்தது. கவலை பெரும்பகுதி குறைந்து மனம் லேசாக மாறிவிட்டது. அன்று இரவு நான் குழந்தையைப் பார்த்துக்



கொண்டு இருந்தேன். என் அருகில் என் அம்மாவும் இருந்தார். வழக்கமாக checkup timeஇல் ஒரு இளம் வயது டாக்டர் வந்தார். அவர் குழந்தையைப் பரிசோதித்துவிட்டு உடலில் உள்ள தழும்பு போன்ற பகுதியைத் தடவினார். அவர் கையில் மதர் சிம்பல் போட்ட மோதிரம் இருந்தது. அவரிடம், நீங்கள் மதர் பக்தரா என்று கேட்டேன். மிகவும் மென்மையாகச் சிரித்துவிட்டு ஆம் என்று தலை அசைத்து சென்றார். எல்லா doctor இடமும் அழுத குழந்தை அவரிடம் அழவே இல்லை! அவர் எங்குச் சென்றாலும் அவரையே பார்த்துக் கொண்டு இருந்தது. அந்த doctor என்னிடம் குழந்தைக்கு இரத்தம் உறைதலில்தான் பிரச்சினை, குழந்தைக்கு எடுத்த factor result வைத்து நல்லபடியாக வந்தால் அதற்கேற்ற முறையிலும், மாறி வந்தால் அதற்கேற்ற முறையிலும் treatment எடுப்போம், பயப்படவேண்டாம், கவலையே படவேண்டாம் என்று கூறினார். அவர் கூறியது, பகவானே வந்து நேரில் கூறியது போன்று இருந்தது. நான் குழந்தை அருகில் அமர்ந்து சாவித்ரி புத்தகத்தைப் படித்துக் கொண்டு இருந்தேன். அப்போது அருகில் உள்ள மற்றோர் குழந்தையின் தாயார் என்னிடம் வந்து நீங்கள் அடிக்கடி இந்தப் புத்தகத்தைத் திறந்துவைத்துப் படித்து பிரார்த்தனை செய்கிறீர்கள், நானும் அவ்வாறே பிரார்த்தனை செய்கிறேன் என்று கூறினார். நானும் கொடுத்தேன். அவரும் வாங்கிப் படித்தார். நாளை வாங்கிக் கொள்கிறேன் என்று கூறிவிட்டு வீட்டிற்கு வந்தேன். மனமுழுவதும் மகிழ்ச்சியும் சந்தோஷமுமாக மாறியிருந்தது. Resultஐ Apolloவில் test செய்ததாகவும் அதில் primary testஇல் எந்த பிரச்சினை இல்லை என்றும் அதனால் factor test தேவை இல்லை என்றும் கூறியதாகவும் பணத்தைக்கூட திரும்பப் பெற்றுக் கொள்ளுமாறும் கூறினார்கள் என்றார். எனக்கு மிக்க மகிழ்ச்சியாக ஆகிவிட்டது. அன்று சுமார் 1 மணிக்கு நீயே போய் report வாங்கி வந்துவிடு என்று கூறினார். நான் hospital சென்றேன். அந்த labஇல் உள்ளவர் பேசியபடி இருந்தபோது அந்த அறையில் அந்த lab head இருந்தார். மற்றவர்களிடம் பேசியபடி இருந்தவர்கள் என்னைப் பார்த்துப் புன்னகைத்தனர். நான் அவர் கைகளைப் பார்த்தேன் அவர் கைகளில்

மதர் சிம்பல் போட்ட மோதிரம் இருந்தது. எனக்கு மகிழ்ச்சியாகிவிட்டது. அந்தப் பெண்மணி நிச்சயம் மதராகவே இருக்கவேண்டும் என்று கருதினேன். அவர்களிடம் நீங்கள் மதர் பக்தரா என்று கேட்டேன் அவர் சிரித்துவிட்டு தீவிரமான பக்தர் என்று கூறினார். Result பற்றிக் கேட்டவுடன் அக்கா, மற்றும் மாமாவின் blood groupஐக் கேட்ட அவரே கணக்கிட்டு பயப்படும்படி ஒன்றும் இல்லை, PT, PTT test செய்து உள்ளோம், கவலையே படவேண்டாம் என்று கூறி மற்றொருவரிடம் பணம் திரும்பப் பெறும் முறையைக் கூறி சென்றுவிட்டார். சிறிது நேரத்தில் கட்டிய பணம் முழுவதும் திரும்பக் கிடைத்துவிட்டது. PT, PTT testக்கு மிகவும் குறைந்த அளவு பணம்கட்டச் சொன்னார்கள். Resultஐ எடுத்துக் கொண்டு hospitalக்கு வந்தேன். விஷயத்தைக் கூறியவுடன் அனைவரும் சந்தோஷப்பட்டனர். பக்கத்து பெட்டில் உள்ள என்னிடம் சாவித்ரி வாங்கிப் படித்த பெண்மணியின் குழந்தை நலமடைந்துவிட்டது என்றும் discharge ஆகிச் சென்றுவிட்டது என்றும் கூறினர். அது எனக்கு மேலும் மகிழ்ச்சி அளித்தது. பிறகு doctorகள் குழந்தையை பரிசோதித்தார்கள். குழந்தைக்கு வைட்டமின் K ஊசி போட்டார்களா என்று கேட்டார்கள் இல்லை என்று கூறியவுடன் இல்லையா பிறகு குழந்தை எப்படி active ஆக உள்ளது என்று ஆச்சரியப்பட்டு மற்ற ஸ்பெஷலிஸ்டிடம் கலந்து ஆலோசித்துவிட்டு குழந்தை ஆச்சரியமான முறையில் முன்னேற்றம் அடைந்து வருகிறது என்று கூறினர். அவர்கள் எதிர்பார்த்தபடி குழந்தையிடம் எந்தவிதமான எதிர்மறை விளைவும் ஏற்படவில்லை. உடனே chief doctor குழந்தையை புகைப்படம் எடுத்து கொண்டார். Junior doctorகளிடம் விளக்கம் கொடுத்து இந்த கேஸ் குழப்பமாக உள்ளது கவனியுங்கள் முக்கியமாக என்று கூறினார். மறுநாள் என் சகோதரிக்கு test எடுக்க சொன்னார்கள். பின் அவர்கள் வேண்டாம் என்றனர். வைட்டமின் K ஊசி போட்டனர். பிறகு அனைத்து ஸ்பெஷலிஸ்ட்டுகளும் பரிசோதித்துவிட்டு பயப்பட ஒன்றும் இல்லை discharge செய்துவிடலாம் என்று கூறினார்கள். ஒரு junior doctor குழந்தையை எப்படிப் பராமரிக்கவேண்டும் என்று கூறி 10 நாள் கழித்து மீண்டும் checkupக்கு வாருங்கள் என்று கூறினார். சிறிது நேரம் கழித்தபின் chief doctor உங்களை



அழைக்கின்றார், முக்கியமாகப் பேசவேண்டும் என்று கூறினார் என்று ஒரு doctor சொல்ல என்னவோ ஏதோ என்று உள்ளே செல்ல, என் சகோதரியிடம் குழந்தை பற்றிப் பேசக் கூப்பிடவில்லை நீங்கள் குழந்தை அருகே அமர்ந்து படித்த அந்த சாவித்ரி புக்கைத் தாருங்கள் நான் படித்துவிட்டுத் தருகிறேன் என்று கூறினார். எனக்கு அன்னையே அனைவரையும் ஆட்கொள்கிறார்கள் என்று புரிந்தது. Discharge ஆகி வரும்போது வழியில் கட்டை மீசைக்காரர் ஒருவர் hospital அருகில் பகவானின் புத்தகம் ஒன்றைப் படித்தபடி இருந்தார். அவர் என்னை நிமிர்ந்து அமைதியாகப் பார்த்துவிட்டு புத்தகத்தில் ஆழ்ந்தார். எங்களைப் பத்திரமாகப் பாதுகாக்கின்ற பகவானே இவர் என்று கருதினேன். வீட்டிற்கு மற்றவர்கள் ஆட்டோவில் வர நானும் தம்பியும் busஇல் வந்தோம். Busஇல் வந்தபோது தம்பி என்னிடம் result வந்தபடி எதுவுமே நடக்கவில்லை. முதலில் வந்த resultஇல் உள்ளதற்கும் இரண்டாவது வந்ததிற்கும் நிறைய வேறுபாடு உள்ளது. இரண்டு நாளில் இவ்வளவு மாறுபாடு வரவே வராது. இரண்டுமே உண்மைதான். ஆனால் இடையே அன்னை சரிசெய்து உள்ளார்கள். அன்னை நம்மைக் கைவிடவே இல்லை என்றான். உண்மைதான் நான் அவனிடம் செலவுகூட குறைவாகத்தான் ஆயிற்று என்று கூறினேன். வீட்டிற்கு வந்தவுடன் என் அப்பா என்னிடம் தங்கள் ஆட்டோ வரும்போது கூடவே அன்னையின் வாகனம் என்ற மற்றோர் வாகனம் வந்ததாகவும் அன்னையே பத்திரமாக அழைத்து வந்ததாகவும் கூறிச் சந்தோஷப்பட்டார்.

ஸ்ரீ அன்னையின் அருளால் குழந்தை வர்ஷாவிற்கு வந்த பெரிய கண்டம் நீங்கிவிட்டது. மருத்துவம், அறிவியல் எல்லாவற்றையும் தாண்டி அன்னையின் அருள் செயல்பட்டு அனைத்தையும் மாற்றிவிட்டது. இந்தப் பிரச்சனை வந்து போனதில் மேலும் ஒருபடி அன்னையை நெருங்கி உள்ளோம்.

குழந்தை ஸ்ரீவர்ஷா நீண்ட ஆயுளும், ஆரோக்கியமும் பெற அன்னையின் ஆசீர்வாதம் வேண்டுகிறேன்.

❊❊❊

# "ஆப்பரேஷனில்லாமல் குணம் பெற முடியும்"

"பல வியாதிகள் ஆப்பரேஷனால் குணமாகின்றன. அவை யூனானி, ஆயுர்வேதமுறைகளில் ஆப்பரேஷனில்லாமல் குணமாகும்" - ஸ்ரீ அரவிந்தர். இது சம்பந்தமாக ஸ்ரீ அரவிந்தர், அன்னை, சாதகர்கள் கூறியவை.

- மறுத்துப்போன உறுப்புகட்கு மீண்டும் உயிரளிக்கின்றனர்.
- குறிப்பிட்ட சிகிச்சைகள் பல உண்டு. நாம் அவற்றைப் புறக்கணித்ததால் அவை பயனற்றுப் போயின.
- ஜோதீந்திர நாத் பானர்ஜி ஒரு சன்னியாசியிடமிருந்து மலடியானவர் கருத்தரிக்கும் மருந்தைப் பெற்றுப் பலனடைந்தார்.
- 10, 15 ஆண்டு மலடிகள் சீக்கிரம் இம்முறையால் கருத்தரித்தனர்.
- பத்தியம் மிகக் கண்டிப்பானது.
- Hydrocele வீக்கத்திற்கும் ஒரு மருந்துண்டு.

**அன்னை கூறியது :**

- உடல் நலமாக உள்ளவரை டாக்டருக்கு பீஸ் உண்டு. நலம் தவறினால் டாக்டருக்குப் பீஸ் நிறுத்தப்படும் என சீன முறை ஒன்றுண்டு. வியாதிஸ்தர்கள் இறந்தால் டாக்டர் வீட்டுக் கதவில் ஒரு மார்க் போடப்படும்.
- நரம்புகளில் ஊசியால் குத்தும் சீனமுறை மிக உயர்ந்தது.



**சாதகர் :**

- எந்த முறையும் எல்லா வியாதிகட்கும் மருந்தைக் கண்டுபிடிக்க முடியாது. அது யோகத்தால் மட்டுமே முடியும்.

ஸ்ரீ அரவிந்தர், "யோகி தன் யோக பலத்தால் வியாதி அழியட்டும் என்றால் அழிந்துவிடும் என்று கூறுகிறீர்களா?" எனக் கேட்டு அனைவரையும் சிரிக்கவைத்தார்.

**உடலில் கட்டி, வடு, மறு, பரு இருந்தால் ஆப்பரேஷன் மூலம் அவற்றை விலக்குகிறோம். மருந்தாலும் கரைக்கின்றனர். எல்லா ஆப்பரேஷன்களும் இப்படி தவிர்க்க முடியாது. பலவற்றைத் தவிர்க்கலாம். அம்முறைகளை நம் நாட்டு முறைகள் அதிகமாகத் தெரிந்திருந்தன. ஆப்பரேஷன் செய்யும் சேவை பெரியது. பிரசவம் தற்சமயம் ஆப்பரேஷனால் அதிகமாக நடக்கிறது. இயற்கையில் எந்த வலியுமின்றி நடக்க வேண்டியது பிரசவம்.** மனப் பீதியாலும், பிரசவத்தின் தன்மையை அறியாததாலும், பிரசவ வேதனை பிரபலமாகிவிட்டது. வியாதியின் தன்மை தெரிந்தால் அதற்குரிய மருந்தும் தெரியுமிடங்களில் ஆப்பரேஷன் தவிர்க்கப்படும் என்ற கருத்தை யூனானி, ஆயுர்வேத முறைகள் பின்பற்றின என்பது அன்றைய விவாதம்.

❊ ❊ ❊

## ஸ்ரீ அரவிந்த சுடர்

சமூகக் கட்டுப்பாட்டையும், உள்ளத்தின் பொன்னான உணர்வுகளையும் மீற முடியாதவனால் அன்னையின் ஆன்மீகச் சுதந்திரத்தை அனுபவிக்க முடியாது.

*சமூகத்தையும், மனச்சாட்சியையும் கடந்தது ஆன்மாவின் சுதந்திரம்.*

## P. 77. Reason, Intuition, Integral experience

## பகுத்தறிவு, ஞானம், ஆத்மானுபவம்

பகுத்தறிவு பெரும்பாலும் சரியாக இருக்கும். தவறும் நேரம் உண்டு. அதனால் பகுத்தறிவுக்குப் பொருத்தமானது என்பதால் மட்டும் ஒன்றை ஏற்க வேண்டிய நிர்ப்பந்தம் நமக்கில்லை. படித்தவனுக்கு அறிவுண்டு எனலாம். படித்தவன் நல்லவன் என்று சொன்னால் அது 60% தான் உண்மையாக இருக்கும். ஞானம் பகுத்தறிவை விட உயர்ந்தது. ஞானம் என்பதை intuition எனவும் நேரடி ஞானம் எனவும் கூறுகிறார்கள். இன்ஜீனியர் படித்தவன். அவன் கட்டும் வீடு நன்றாக இருக்கும் என்பது 90% உண்மை. முழுவதும் உண்மை எனக் கொள்ள முடியாது. கொத்தனார் அனுபவசாலி. பல வீடுகள் கட்டியிருக்கிறார். இன்ஜீனியர் படிப்பைவிட கொத்தனார் அனுபவத்தை நம்பலாம் என்பது சரி. கொத்தனார் படிப்பில்லாதவர். அனுபவத்தில் அவருக்குத் தெரிந்தது சரி. அவருக்கு அனுபவமில்லாத இடத்தில் சரி வாராது. அத்துடன் கொத்தனார் தன் அனுபவம் தவிர மற்றவர் அனுபவம் தவறு என்பார். R.C. roofing வந்தபொழுது சாரம் போட்டு கட்டிய எந்தக் கொத்தனாரும் R.C.யை ஏற்கவில்லை. “நிற்காது” என்று மறுத்தனர். Integral experience ஆத்மானுபவம் என்பது படிப்பின் அடிப்படையில் அனுபவம் பெற்ற இன்ஜீனியர் வேலை. இவருக்குப் படிப்புண்டு, பல கட்டிடங்களைக் கட்டியவர். அதனால் படிப்பைவிட, படிப்பில்லாத அனுபவத்தைவிட, படித்த அனுபவம் பெரியது.

| | |
|---|---|
| பகுத்தறிவு தவறலாம் | - இது முதல் நிலை. |
| நேரடி ஞானம் அறிவைவிடச் சிறந்தது | - இது இரண்டாம் நிலை. |
| ஆத்மானுபவம் - படிப்பின்பேரில் ஏற்பட்ட அனுபவம் | - முடிவானது. |



முதலிரண்டும் மூன்றின் பகுதி. நாம் பகுத்தறிவில் ஆரம்பித்து ஆத்மானுபவம்வரை செல்லமுடியும்.

போட்டோ - வீடியோ - கண்ணால் பார்ப்பது.

பகுத்தறிவு - ஞானம் - ஆத்மானுபவம்.

போட்டோவைப் பகுத்தறிவுக்கும், வீடியோவை ஞானத்திற்கும், நேரடியாகப் பார்ப்பதை integral experience ஆத்மானுபவத்திற்கும் உதாரணமாகக் கூறலாம்.

1) போட்டோவில் தவறு வரலாம்.

2) அத்தவறு வீடியோவில் வாராது.

3) நேரடியாகப் பார்த்துப் பேசுவது முடிவானது என்பதாலும் போட்டோவும், வீடியோவும் அதன் பகுதிகள் என்பதாலும் இம்மூன்றாம் நிலையை நாம் ஏற்கலாம்.

அதனால் போட்டோவை நம்ப முடியாது என்பதில்லை. வீடியோவில் இல்லாததைக் காட்டமுடியாது என்று கூற முடியாது. நேரடியாகப் பார்த்துப் பேசுவது மற்ற இரண்டையும்விட பூரணமானது என்பதையும் மறுக்க முடியாது.

நேரடியாக ஒருவரைப் பார்ப்பதைவிட போட்டோவில் அழகாகத் தெரிவதும் உண்டு. வீடியோ காட்சியில் ஒரு வீடு நேரே பார்ப்பதைவிடக் கவர்ச்சியாக இருப்பதும் உண்டு. இவையெல்லாம் மனிதனே ஏற்படுத்தியவை என்பதால் உயர்வு, தாழ்வு என்பதைக் கருதவேண்டிய அவசியமில்லை. எதையும் வற்புறுத்தாத மனநிலை, எதையும் மறுக்காத மனநிலை மேல்.

❊ ❊ ❊

### ஸ்ரீ அரவிந்த சுடர்

அரிய பொருளான உணர்வின் வேகத்திற்குரிய ஞான வேட்கை, சிந்தனையாகிறது.

## அன்னை அன்பர்கட்குச் சுதந்திரமும் தேவை, கட்டுப்பாடும் தேவை

*(சென்னை - மாம்பலம் - தியான மையத்தில், 21-2-2001 அன்று, திரு. N. அசோகன் நிகழ்த்திய உரை)*

ஆனந்தம், அனந்தம் என்ற இரு கருத்துகளை நாம் அறிவோம், ஆனந்தம் என்பதற்கு விளக்கம் தேவையில்லை. அந்தம் என்றால் முடிவு, முடிவற்றது, அனந்தம் Infinity. ஆனந்தம் என்ற அகம், அனந்தம் என்ற புறமாகிறது. காலத்தை அகமாகவும், புறத்தை இடமாகவும் தத்துவம் கூறுகிறது. மனத்தால் நினைப்பது கற்பனை. அது அகம். கையால் செய்வது செயல். அது புறம்.

வலி என்பது சுதந்திரமில்லாத நிலை. செயலுக்குத் தடை ஏற்படுவது வலிக்கு ஆரம்பம். எந்தவிதமான தடையுமில்லாவிட்டால், அது சுதந்திரமான நிலை. எல்லா வகைச் சுதந்திரமிருந்தால் அங்கு வலிக்கு வேலையில்லை. வலி போனபின் எழுவது ஆனந்தம். **தடையற்ற நிலை, முடிவற்றிருக்குமானால் அது அனந்தம். அதுவே ஆனந்தத்தின் புறநிலை.**

கட்டுப்பாடு என்பது புறத்திலும், அகத்திலுமுள்ளது. குடும்பக் கட்டுப்பாடு, சமூகக் கட்டுப்பாடு, சர்க்கார் சட்டம் ஆகியவை புறக்கட்டுப்பாடுகள். வெட்கம், மானம், மரியாதை, கௌரவம், தன்மானம், பண்பு ஆகியவற்றைக் கட்டிக் காப்பது அகக்கட்டுப்பாடு.

- புறக்கட்டுப்பாட்டிற்குட்படுபவன் நல்ல குடிமகனாக இருப்பான்.
- அகக்கட்டுப்பாடுள்ளவன் பண்பாளனாகவோ, திறமைசாலியாகவோ இருப்பான்.
- அன்னை அன்பனுக்குப் புறக் கட்டுப்பாடு, அகக் கட்டுப்பாட்டிலிருந்து எழ வேண்டும்.



- ஆராய்ச்சியைத் தொடர்ந்தால் பிரம்மம் சுதந்திரமானது, அடிப்படையில் நாமே பிரம்மம், நமக்குப் பிரம்ம ஞானம், பிரம்மச் சுதந்திரம் உண்டு. பிரம்மம் இவ்வுலகைச் சிருஷ்டித்தது. அது ஆனந்தத்தை நாடுகிறது. ஆனந்தம் தவிர உலகில் வேறெதையும் பிரம்மம் சிருஷ்டிக்கவில்லை. உலகம், அதன் குறைகள், குற்றங்கள், நல்லது, தீமை உட்பட பிரம்மத்திற்கு அற்புதக் காட்சி. நமக்குப் பிரம்ம ஞானம் வந்த பொழுது உலகம் பிரம்மாற்புதமாகத் தெரியும். பிரம்மம் பெற்றுள்ள சுதந்திரம் முடிவான சுதந்திரம். அதே சுதந்திரம் நமக்குண்டு. ஆனால் இன்று நாம் மேல் மனத்தால் உலகில் செயல்படுகிறோம். நடைமுறையில் பிரம்மத்தின் சுதந்திரத்தை உள்ளே அனுபவிப்பவனுக்கு உலகத்திற்குரிய கட்டுப்பாடுண்டு.

**அன்பன் மனதில் பிரம்மத்தின் பூரணச் சுதந்திரம் நிலவும்பொழுது, கட்டுப்பாட்டுடன் அவன் நடக்கவேண்டும் என்ற சட்டம்,**

**பிறருக்குச் சுதந்திரம்**
**எனக்குக் கட்டுப்பாடு**

என்று நடைமுறைச் சட்டமாக மாறும். இந்நிலையில் மனம் இயல்பாகச் சந்தோஷப்படுவது அன்பருக்குரிய ஆன்மீக மனநிலை.

தம்பிக்கு முக்கியமானவர் நண்பர். அவர் செல்வர், செல்வாக்குள்ளவர். அடிக்கடி தம்பி அவரைச் சந்திப்பான். அண்ணனுக்கு அதனால் தம்பி மீது பிரியம், மரியாதை, தம்பிக்கு வந்த மரியாதை தனக்கு வந்ததாகக் கருதுவான். முக்கியஸ்தர் போனில் தம்பியிடம் பேசுவதும் உண்டு. ஒரு நாள் தம்பி போனில் பேசும்பொழுது லைன் பல முறை கட் ஆனதை அண்ணன் கண்டு வருந்தினான். பின்னர் ஓரிரு சமயம் இதைக் கவனித்துள்ளான். போனில் தடையில்லாமல் தம்பி பேசவேண்டும் என்று அண்ணன் கருதுகிறான். ஆனால் போனில் தடை எழுகிறது. பக்தனானதால் எல்லாக் கோணங்களிலும் ஆராய்ச்சி செய்து பலனில்லை என்ற

பின், தன் மனத்தைச் சோதனை செய்தான். மனம் பிரியமாக இருப்பது தெரிகிறது. மனம் பிரியமாக இருந்தாலும், அதன் கீழே தடையிருப்பதாக வைத்துக் கொண்டே பார்ப்போம் என முடிவு செய்தான். அதன் பிறகு போன் பேசுவது தடைப்படுவதில்லை.

- *தம்பி மீது பிரியம் உண்மை.*
- *முக்கியஸ்தர் விஷயத்தில் மனம் நேராக இருக்கிறது.*
- *அவற்றைக் கடந்து மனம் ஆழத்தில் தடையை ஏற்படுத்துகிறது.*

அகக்கட்டுப்பாடு முழுமையாக வேண்டுமானால் மனம் அந்தரங்கத்தில் சுத்தமாக இருக்க வேண்டும். அண்ணனுக்கு அந்த அளவு சுத்தம் தேவையானால், தம்பிக்கும் அதே அளவு சுத்தம் ஆழத்தில் தேவை.

கட்டுப்பாடு வேலை கற்றுக் கொள்ளத் தேவை. (Skill) இது உடலுக்குரிய பயிற்சி. நல்ல நோக்கம் பெற கட்டுப்பாடு தேவை (attitude). இது மனத்திற்குரிய விரதம். பண்புகளைப் பெற கட்டுப்பாடு தேவை. இது ஆத்மா போற்றும் கட்டுப்பாடு. தியானம் செய்ய மனம் கட்டுப்பட வேண்டும், இது யோகக் கட்டுப்பாடு.

- *புறக்கட்டுப்பாடு சமூகம் அதிகபட்சம் தருவதைப் பெற உதவும்.*
- *சமூகத்தின் அதிகபட்சம் ஆன்மாவின் குறைந்தபட்சம்.*
- *அன்பருக்கு ஆன்மாவின் அதிகபட்சம் வரம் உண்டு.*
- *அதற்குரிய கட்டுப்பாடு நிதானம்.*
- *இயல்பான சந்தோஷம் இறைவனை நாடும்.*
- *நிதானம், இயல்பான சந்தோஷம் தரும்.*
- *நிதானமாக, இயல்பாகச் சந்தோஷப்பட அன்பன் நாட வேண்டியது அகம்.*
- *அகம், புறத்தை ஆளுவது ஸ்ரீ அரவிந்தம்.*
- *புறத்தை ஆளும் அகத்திற்கு ஆன்மீக வலிமை தேவை.*



பக்தனுக்கு இனிய நண்பன். கட்டுப்பாட்டின் சிகரமாக இனிமை பெற்றவன். சூட்சுமமான அறிவையுடையவன். பக்தனுக்குள்ள அறிவு பலருக்கும் தெரிவதை விட நண்பனுக்கு அதிகமாகத் தெரியும். பேச்சு பெரிய கட்டுப்பாட்டுக்குட்பட்டது. மனம் ஆழத்தில் பொறுக்கவில்லை, சொல் கட்டுப்பட்டதானதால் மனத்தை நேரடியாகச் சொல் வெளிப்படுத்தத் தயங்கியது. கேலியாக நண்பனை,

“நீ எதிர்காலத்தில் பெரிய மனிதனாக வருவாய்

உன் கடிதங்களை நான் பொக்கிஷமாகச் சேர்த்து

வைத்து, பின்னால் உலகுக்கு அறிவிக்கிறேன்,”

என்று கூறி நகைப்பது வழக்கம். பக்தனுக்கு அவன் அத்தை தனக்குப் பிள்ளையில்லாததால், தம் சொத்தைத் தர விரும்பினார். பக்தன் அதில் அக்கறை காட்டவில்லை. வலியுறுத்தியபொழுது, மறுத்துவிட்டான். நண்பன் சொத்து விபரம் அறிந்தவன்.

“உனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது என என் தாயார் கூறுகிறார்,”

என்று நண்பனைக் கடிந்தான். நண்பன் நல்லவன், இனியவன். மனம் நன்றாக இருந்தாலும், மனித சுபாவம், சுபாவமாகவேயுள்ளது என்பது நாளாவட்டத்தில் தெரிய ஆரம்பித்தது. பக்தனுக்கு வருமானம் பெருகுவது நண்பன் கண்ணிலும், மனதிலும் பட்டது. பட்டதாகவே நண்பன் பொருட்படுத்தவில்லை. பக்தனிடம் காண்பிக்கவில்லை. பக்தன் நிலை உயர ஆரம்பித்தது. நண்பர் பார்வையில் அதிகமாக உயர்ந்தது. சந்திப்பதை நிறுத்திவிட்டான். கடிதம் எழுதுவதையும் தவிர்த்தான். பக்தனுக்கு வந்த உயர்வு, இவன் வீட்டாரில் சிலருக்கும் வந்தது. நண்பன் காலமானான்.

பக்தன் சிக்கலில் மாட்டிக்கொண்டபொழுது சேவையும், பக்தியும், உடலையும், உடமையையும், உரிமையையும் காப்பாற்றின. ஊரார் பொறாமை நிறைந்த பேச்சை நிறுத்த முடியவில்லை. எதுவும் பக்தன்

காதிற்கு வரவில்லை. சிறந்த சேவையை, தன்னலமற்ற சேவையை, தியாகத்தை, பொறாமை சுயநலமாக, அநியாயமாகப் பேசுகிறது. பக்தன் வீட்டிற்குப் புடவை விற்பவன் வந்தான். பக்தனை நோக்கி, உங்களுக்கேன் ஊரார் சொத்துமேல் ஆசை என்று கேட்டான். புடவைக்காரன் பெயரும் நண்பரின் பெயரும் ஒன்றே. நண்பரின் சொல் கட்டுப்பட்டது. மனம் கட்டுப்படவில்லை. அவர் கருத்து அவர் பெயருள்ள புடவைக்காரன் மூலம் வெளிவந்தது. அகம் கட்டுப்பட அதிக பக்குவம் தேவை.

மனித வாழ்க்கை எப்படி அமைந்திருக்கிறதென்றால், அவனுக்கு கிடைக்கின்ற நல்ல விஷயங்களைக் கூட அவன் அளவோடு அனுபவித்தால்தான் அவை அவனுக்கு நல்லது செய்கின்றன என்ற விதத்தில் அமைந்துள்ளது. நல்லதைக் கூட அவன் அளவிற்கு மீறி அனுபவித்தால் அந்த நல்லதே அவனுக்குக் கெட்டதாக மாறிவிடும் வகையில் வாழ்க்கை செயல்படுகிறது. அளவை மிஞ்சினால் அமிர்தமும் விஷம் என்ற பழமொழி மேற்கண்ட உண்மையை நன்றாக விளக்குகிறது. அப்பழமொழி காரணமில்லாமல் உருவாகவில்லை. நல்ல காரணத்துடன்தான் உருவாகியிருக்கிறது.

நம்முடைய மனித சுபாவம் முழுச் சுதந்திரம் வேண்டுமென்று தான் கேட்கிறதேயொழிய எந்த வகையான கட்டுப்பாட்டையும் நம் சுபாவம் விரும்புவதில்லை. சுதந்திரம் நல்லது அதைத்தான் நம் மனம் நாடுகிறதென்றாலும், பரிபூரணச் சுதந்திரத்தை நல்லபடியாகப் பயன்படுத்திக் கொள்ளும் பக்குவம் நமக்கில்லாத நிலையில் அந்தச் சுதந்திரத்தை ஓரளவிற்குக் கட்டுப்படுத்தி அது தவறாகப் பயன்படக்கூடிய இடங்களிலெல்லாம் கட்டுப்பாடுகள் என்ற தடுப்புகளை நாம் போட்டே ஆகவேண்டுமென்றாகிறது.

எந்தவிதக் கட்டுப்பாடுமில்லாமல் பரிபூரணச் சுதந்திரம் நமக்குக் கிடைத்தால் நாம் என்ன செய்வோம் என்பதைச் சற்று சிந்தித்து பார்த்தால், கட்டுப்பாட்டின் அவசியம் நமக்குப் புரியும். முதலில் பள்ளிக்குப் போகும் வயதிலுள்ள சிறுவர் சிறுமிகள் பள்ளிக்கு ஒழுங்காகப் போகவே மாட்டார்கள். எந்நேரமும் விளையாடிக்கொண்டு



தானிருப்பார்கள். படிப்பதென்பது மறந்தே போய்விடும். வேலைக்குப் போக வேண்டியவர்களும் ஒழுங்காக வேலைக்குப் போகமாட்டார்கள். காலையில் தாமதமாகச் சென்று மாலையில் சீக்கிரமாகத் திரும்புவார்கள். இஷ்டத்திற்கு லீவு எடுப்பார்கள், செய்யாத வேலைக்குச் சம்பளம் கேட்பார்கள். எந்த அலுவலகத்திலும் எந்த வேலையும் நடக்காது. நாடே இயங்க முடியாமல் ஸ்தம்பித்துப் போய்விடும். Trafficஐக் கட்டுப்படுத்துவதற்காக இருக்கக்கூடிய traffic police VIP security மற்றும் அரசியல் மாநாடுகளை கண்காணிப்பதற்காகத் திசை திருப்பிவிடப்படும் பொழுது, traffic signalகளை யாரும் மதிக்காமல் அவரவரும் இஷ்டத்திற்கு வாகனத்தை ஓட்டி traffic ruleகளை மீறும்பொழுது, சாலையில் எப்படி மோசமான traffic jam உருவாகிறது என்பதை நாம் பார்க்கிறோம்.

Traffic ஒழுங்காக போவதற்கு traffic control எவ்வளவு அவசியமோ அதே அளவிற்கு நம் வாழ்க்கை ஒழுங்காக நடப்பதற்கும், நமக்கிருக்கும் சுதந்திரம் நம்மையே பாதிக்காமல் இருப்பதற்கும் நம் வாழ்க்கையில் கட்டுப்பாடுகள் தேவையாகின்றன. அதே சமயத்தில் சுதந்திரமே இல்லாமல் முழுக்கக் கட்டுப்பாடுகளாலேயே நிரம்பிய வாழ்க்கையும் பயனில்லாத சந்தோஷமில்லாத வாழ்க்கையாக மாறிவிடும். முழுக் கட்டுப்பாடு என்பது வண்டியே நகர முடியாத அளவிற்கு brakeஐ tight ஆக வைப்பதற்குச் சமமாகிவிடும். வேகமாகப் போகின்ற வண்டியை நிறுத்துவதற்காகத்தான் இருக்கிறதேயொழிய, வண்டியை நகரவே விடாமல் தடுப்பதென்பது brake தன்னுடைய வேலையைத் தவறாகச் செய்வதாகிவிடும்.

அம்மாதிரியே சுதந்திரமென்ற சக்கரங்கள் இயங்கினால்தான் வாழ்க்கை என்ற வண்டியே நகரும். அதே சமயத்தில் கட்டுப்பாடென்ற brakeஉம் இருந்தால்தான் சுதந்திரம் அளவிற்கு மீறிப் போவதால் வரும் விபரீதங்களையும் தடுக்க முடியும்.

ஆக நம் வாழ்க்கையில் இரண்டுமே அவசியமென்றாகிறது. எந்த அளவிற்குச் சுதந்திரம் வேண்டும், எந்த அளவிற்குக் கட்டுப்பாடு வேண்டும் என்று நாம் சரியாக நிர்ணயிப்பது கடினம். Combination எப்படியிருக்க வேண்டுமென்பது அவரவருடைய மனநிலை மற்றும் வாழ்க்கைச் சூழ்நிலைகளைப் பொருத்தமையும். பொதுப்படையாகச் சொன்னால் இரண்டும் சரிசமமாக 50:50 இருப்பது நல்லதென்று வைத்துக் கொள்ளலாம். மனப்பக்குவம் நிறைந்தவர்களுக்குச் சுதந்திரம் அதிகமாகவும், கட்டுப்பாடு குறைவாகவும் இருந்தாலும் அவர்கள் வாழ்க்கையை அவர்கள் நல்லபடியாகவே அமைத்துக் கொள்வார்கள். ஏனென்றால் வெளிக்கட்டுப்பாடு குறைந்தாலும் அவர்கள் அதற்குப் பதிலாக தம்மைச் சுயக்கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்வார்கள்.

மனப்பக்குவமில்லாதவர்களுக்குக் கட்டுப்பாடு அதிகமாகவும் சுதந்திரம் குறைவாகவுமிருந்தால்தான் அவர்கள் வாழ்க்கை நல்லபடியாக நடக்கும் என்றாகிறது. மேலும் சுதந்திரமும் கட்டுப்பாடும் என்ன விகிதத்தில் combine ஆகவேண்டுமென்பதை விட, யாருக்கு எந்த விஷயத்தில் சுதந்திரம் வேண்டும், எந்த விஷயத்தில் கட்டுப்பாடு வேண்டுமென்பதை நிர்ணயிப்பது முக்கியம். கட்டுப்படுத்த வேண்டிய விஷயத்தில் கட்டுப்பாட்டைக் கொண்டு வந்தால், வாழ்க்கை பெரிய அளவில் பாதிக்கப்பட்டுவிடும்.

சிறுவர் சிறுமியர்கள் எத்தனை மணி நேரம் விளையாடலாம், எத்தனை மணி நேரம் T.V. பார்க்கலாமென்பதை பெரும்பாலான பெற்றோர்கள் ஒரு கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார்கள். நேரத்தை கட்டுப்படுத்துவது சரியென்றாலும், என்ன விளையாட்டு விளையாடலாம் என்பதையாவது சுதந்திரமாக அவர்களே முடிவு செய்யவிடலாம். அதையும் கட்டுப்படுத்த விரும்பும் பெற்றோர்களும் இருக்கிறார்கள். ஆனால் அத்தகைய கட்டுப்பாடு அவசியமில்லை என்று நினைக்கிறேன். வெளிநாடுகளில் 18 வயதிற்கு மேல் பிள்ளைகளின் வாழ்க்கையில் பெற்றோர்கள் தலையிடுவதில்லை. அவர்களுடைய இஷ்டத்திற்கு வாழ்க்கையை அமைத்துக் கொள்ள



உரிமை அளித்துவிடுகிறார்கள். வயது வந்த பிள்ளைகள் என்ன course படிக்கிறார்கள், என்ன வேலையில் சேர்கிறார்கள், யாரைத் திருமணம் செய்து கொள்கிறார்கள் என்பதில் அவர்களுக்கு நிறைய சுதந்திரம் இருக்கிறது. ஆனால் இங்கே அப்படியில்லை. பிள்ளைகள் major ஆன பிறகும் பெற்றோர்கள் இவ்விஷயங்களில் கூட தலையிடுகிறார்கள், தம்முடைய அதிகாரம் இவற்றிலும் செல்லவேண்டும் என்று விரும்புகிறார்கள்.

ஆனால் மேல்நாட்டு கலாச்சாரம் நாளுக்கு நாள் இங்கேயும் அதிகரித்துக் கொண்டு வருவதைப் பார்க்கும்பொழுது, இந்திய இளைஞர்களின் சுதந்திர வேட்கையும் அதற்கேற்றபடி பெருகிக் கொண்டுதான் வருகிறது. இதை வைத்துப் பார்க்கும் பொழுது இந்நாட்டிலும் கூட பெற்றோர்கள் major ஆன பிள்ளைகளின் வாழ்க்கையைக் கட்டுப்படுத்த முயலாமல், படிப்பு, உத்யோகம், திருமணம் போன்ற விஷயங்களில் சுதந்திரத்தை அளித்துவிடுவது நல்லதென்றே எனக்குப் படுகிறது. இவ்விஷயங்களில் பெற்றோர் கட்டாயப்படுத்தும்பொழுது வீட்டில் பெரும்பாலும் சுமுகம்தான் கெட்டுப்போகிறது. பிள்ளைகளாக முன்வந்து படிப்பு, உத்யோகம், திருமணம் போன்ற விஷயங்களில் பெற்றோரின் அதிகாரத்திற்கு கட்டுப்பட முன்வந்தால், அப்பொழுது இவர்கள் தலையீட்டால் சுமுகம் கெடாமல் காரியம் நடக்கும்.

பெரும்பாலான அன்னை அன்பர்களின் குடும்பங்களில் பெற்றோர் அன்னையை ஏற்றுக் கொள்ளும்பொழுது பிள்ளைகளும் automatic ஆக அன்னையை ஏற்றுக் கொள்கிறார்கள். கணவன் மனைவியிடையே கூட ஒருவர் அன்னையை ஏற்றால் மற்றவரும் அன்னையை ஏற்பதையும் பார்க்கிறோம். ஆனால் விதிவிலக்காகவும் நிறைய குடும்பங்களுள்ளன. மனைவி அன்னை பக்தையான பின்னும் கணவர் அன்னை பக்கம் திரும்பாமல் இருப்பதுண்டு. அவரைப் பலவந்தமாக அன்னை பக்கம் திருப்பாமல் இவ்விஷயத்தில் அவருடைய சுதந்திரத்தை மதிப்பது மனைவிக்கு நல்லது. அவரையும் தன் பக்கம் அழைத்துக் கொள்ளவேண்டுமென்று அன்னை முடிவு

செய்தால் அன்னையின் அழைப்பை ஏற்று அவரே தாமாக அன்னையை நாடுவார். அதுவரையில் மனைவி தன்னுடைய ஆர்வத்தை ஒரு கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பது மனைவிக்கு நல்லது.

அன்னை அன்பர்கள் அன்னை விரும்பும் முன்னேற்றத்தை தம்முடைய வாழ்க்கையில் காண விரும்பினால், தாமாகத் தம்மை ஒரு சுயக்கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்வது நல்லது. பூரண யோகப்பாதையில் முன்னேற விரும்புகின்றவர்களுக்கு இந்த சுயக்கட்டுப்பாடு மிகவும் அவசியம். பூஜை புனஸ்காரங்கள், மற்றும் சடங்கு சம்பிரதாயங்களிலிருந்து அன்னை ஆசிரமவாசிகளுக்குப் பெரிய விடுதலை அளித்துள்ளார். வெளிக்கட்டுப்பாடென்று அவர் வலியுறுத்தியது நான்கு விஷயங்கள்தாம். ஆசிரமவாசிகள் உடலுறவு வைத்துக் கொள்ளக்கூடாது, மதுபானம் மற்றும் புகை பிடித்தல் ஆகியவற்றிலும் ஈடுபடக்கூடாதென்பதில் அவர் மிகவும் கண்டிப்பாகவிருந்தார். ஆசிரமவாசிகளுக்கு அரசியல் ஈடுபாடும் கூடாதென்றும் ஒரு கட்டுப்பாட்டை விதித்திருந்தார்.

இந்த அடிப்படைக் கட்டுப்பாடுகளில் அவர் உறுதியாக இருந்தாரேயொழிய அவரவருடைய ஆன்மிக முன்னேற்றத்தை அவரவருடைய ஆர்வத்திற்கு ஏற்றாற்போல அமைத்துக் கொள்ளும் உரிமையையும் சுதந்திரத்தையும் அவர்களுக்கு நிறையவே கொடுத்திருந்தார். ஆசிரமவாசிகளாக இருந்தாலும் தினமும் எட்டு மணி நேரம் வேலை செய்வது நல்லது என்று சொல்லியிருந்தார். ஆனால் அதற்குக் கட்டுப்படாதவர்களை அவர் கண்டித்தாகத் தெரியவில்லை.

பூரண யோகத்தில் வருகின்ற முன்னேற்றம் அவரவருடைய இறையார்வம், சமர்ப்பணம், சரணாகதி ஆகியவற்றை பொருத்ததாகும். இவற்றை எந்த அளவிற்கு எவ்வளவு வேகமாக ஓர் அன்னை பக்தர் வளர்த்துக் கொள்கிறாரென்பது அவருடைய இஷ்டத்தை பொருத்ததாகும். அடுத்தவருடைய அதிகாரம் மற்றும் கட்டுப்பாட்டிற்குக் கட்டுப்படக் கூடிய விஷயங்கள் இல்லை இவை. ஆகவே இவ்விஷயத்தில் அன்னை ஆசிரமவாசிகளுக்குப் பூரண சுதந்திரமளித்துவிட்டார்.



மேலும் சுதந்திரமான சூழலில்தான் ஆன்மா உண்மையாக வளர்ச்சியடைகிறது என்பதை வைத்துப் பார்க்கும்பொழுது இதைத் தவிர வேறு சிறந்த வழியில்லை என்பதும் தெரிகிறது. நாம் நாடுவது ஆன்மிக முன்னேற்றமாகவிருந்தால், அதை நாம் பொறுமையாக, நம்முடைய பக்குவத்திற்கேற்றபடி பெற்றுக் கொள்ளலாம். ஆனால் அன்னையினுடைய அருளைத் துணையாக வைத்துக்கொண்டு நம்முடைய வாழ்க்கையின் தரத்தையும் பொருளாதார நிலையையும் உடனே உயர்த்திக் கொள்ள விரும்புகிறோமென்றால், அந்த அவசரத்திற்கேற்றபடி நம்மை நாம் ஒரு சுயக்கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தே ஆகவேண்டும்.

அன்னை விதித்துள்ள கட்டுப்பாடுகளை அவர்கள் மதித்து நடக்கும்பொழுது அந்த அளவிற்கு அவர்கள் வாழ்க்கையில் பெரும் முன்னேற்றங்கள் வந்திருக்கின்றன.

நேரடியாக அன்னையுடைய கண்காணிப்பில் இல்லை என்றாலும், அன்னையின் அருளால் வாழ்க்கையில் முன்னேற விரும்புகின்றவர்களுக்கு என்னென்ன கட்டுப்பாடுகள் தேவை என்பதை அவர் தம்முடைய புத்தகங்களில் நிறையவே எழுதியிருக்கிறார். அவற்றைப் பின்பற்றினாலே அன்பருக்கு வேண்டிய முன்னேற்றம் விரைவில் கிடைத்துவிடும்.

அன்னை வழியில் வாழ்க்கை முன்னேற்றம் என்பதுதான் நம்முடைய குறிக்கோளாகவிருந்தால், நம்முடைய செயல்பாடு, மனோபாவம், சிந்தனை, பேச்சு என்றெல்லாமே இவற்றிற்கு ஒத்துழைக்கும் வகையில் இருக்கவேண்டும். ஒரு வாய்க்கால் வழியாக வயலுக்கு நீர் பாய்ச்சுகிறோமென்றால், அந்த வயலுக்குப் போகாமல் மற்றவிடங்களுக்கு உடைப்பு வழியாக நீர் போனதென்றால் அந்த தண்ணீர் விரயமாவதாகத்தான் அர்த்தமாகிறது. அம்மாதிரியே முன்னேற்றந்தான் நம் நோக்கமென்றால், நம்முடைய time மற்றும் எனர்ஜியை அதற்கு ஒத்துவராத காரியங்களில் செலவிட்டால், அந்த அளவிற்கு அவை விரயமாவதாகத்தான் அர்த்தமாகிறது.

அரட்டை அடிப்பது, வம்பு பேசுவது, மணிக்கணக்காக T.V. பார்ப்பது போன்றவை நம்முடைய எனர்ஜி விரயமாகும் வழிகளாகும். இத்தகைய காரியங்களில் ஈடுபடாத அளவிற்கு நம்மை ஒரு கட்டுப்பாட்டில் வைத்திருக்கவேண்டும். Punctual ஆகவிருக்கும் பொழுதுதான் நம்முடைய time அதிகபட்ச பயனுள்ளதாகச் செலவாகிறது. Punctuality இல்லையென்றால் நம்முடைய time மற்றும் மற்றவர் time இரண்டும் விரயமாகிறது. நம்முடைய நேரத்தை நாம் சிறப்பாக manage பண்ண விரும்பினால் அதற்குச் சில கட்டுப்பாடுகள் தேவை. அவற்றை நாம் பின்பற்றியே ஆகவேண்டும். காலையில் 8.30 மணிக்கு வீட்டைவிட்டு தினமும் வெளியேறினால் தான் அலுவலகத்திற்கு punctual ஆகப் போய்ச் சேர முடியுமென்றால் எத்தனை மணிக்கு காலையில் எழுந்தால், இது சாத்தியமாகுமென்று கணக்கிட்டு அத்தனை மணிக்கு correct ஆக எழுந்திருக்கும் பழக்கத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். Business செய்பவர்கள் அவர்களுக்கு வருகின்ற ஆர்டர்களைச் சொன்ன நேரத்தில் execute பண்ணுகிற efficiency இல்லையென்றால் அவர்களுக்கு வருகிற orders குறைந்து போகும்.

Time managementக்கு எப்படியொரு கட்டுப்பாடு தேவையோ அதே அளவிற்கு financial managementற்கும் ஒரு கட்டுப்பாடு தேவை. நமக்கென்ன வருமானமோ அதற்குள்தான் நம்முடைய செலவுகளையும் பார்த்துக் கொள்ளவேண்டுமென்றால் அதற்கொரு financial discipline இருந்தால்தான் முடியும். ஒருவருடைய மாத வருமானம் 7000 ரூபாய் என்னும்பொழுது, அவர் தம்முடைய மாதாந்திர செலவுகள் 10,000 ரூபாய் அளவிற்கு இருப்பதாகச் சொல்லிக் கொண்டு, மாதம்தோறும் 3000 கடன் வாங்கியாவது அச்செலவுகளைச் சமாளிக்க முயல்கிறார் என்றால் அவருக்கு financial discipline சுத்தமாகவில்லை என்றர்த்தம்.

ஒருவருக்கு வருடாந்திர வருமானம் 1,00,000 ரூபாயென்றால், அவர் மிகவும் efficient ஆகச் செலவு செய்தால்கூட அதிகபட்சமாக வருடத்திற்கு 20,000 ரூபாய் அளவிற்குத்தான் savings செய்யமுடியும். அதாவது வருடாந்திர வருமானத்தில் 20% தான்



அதிகபட்சமாக savings செய்ய முடியுமென்றாகிறது. கடனைத் திருப்பிக் கொடுக்க விரும்புகின்றவர்கள் savingsஇல் இருந்துதான் திருப்பிக் கொடுக்க முடியுமென்னும்பொழுது, லட்சம் ரூபாய் வருடாந்திர வருமானமுள்ளவர்கள் வருடத்திற்கு 20,000 ரூபாய்க்கு மேல் கடன் வாங்கக் கூடாதென்றாகிறது. அப்படி 20,000ற்கும் மேல் கடன் வாங்குகின்றவர்களுக்கு financial discipline சுத்தமாகவில்லை என்று தெளிவாகச் சொல்லிவிடலாம்.

வருமானம் குறைவாகவுள்ளது, ஆனால் செலவு அதிகமாகவுள்ளதென்பவர்கள், செலவிற்கேற்றபடி தம் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள கர்மயோகி அவர்கள் எழுதிய வருமானம், தொழில்வளம் மற்றும் அதிர்ஷ்டம் போன்ற கட்டுரைகளையும், புத்தகங்களையும் படித்து அவற்றிலுள்ள விஷயங்களைக் கடைப்பிடித்தால் அவர்களுடைய வருமானம் உயர்வதைப் பார்க்கலாம். அப்படி வருமானம் உயரும்வரையிலும் அவர்கள் பொறுமையாகச் செலவுகளையெல்லாம் ஒரு கட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொண்டு financial disciplineஐ கடைப்பிடித்தே ஆகவேண்டும்.

அப்படி discipline கடைபிடிக்காமல் எதிர்காலத்தில் வருமானம் வருமென்று நம்பி தற்பொழுது நிறைய கடன் வாங்கிச் செலவு செய்தால், அத்தகைய கட்டுப்பாடற்ற மனநிலைமையே வருமானம் அதிகரிப்பதைத் தள்ளிப்போகச் செய்யும். கையிலுள்ள வருமானத்தை முழுமையாகச் செலவு செய்தால் மேற்கொண்டு அதிகமாக வரும் என்று அன்னை கூறியிருப்பது உண்மை. ஆனால் வருமானத்தைத்தான் அவர் தாராளமாகச் செலவு செய்யச் சொல்லியிருக்கிறாரேயொழிய, கடன் வாங்கி அதிகமாகச் செலவு செய்தாலும் மேற்கொண்டு அதிக வருமானம் வருமென்று அவர் சொல்லவே இல்லை.

Time management மற்றும் finance managementஇல் எப்படிக் கட்டுப்பாட்டைக் கொண்டு வரவேண்டுமென்று நானிதுவரையிலும் சொன்னேன். இப்பொழுது மனநிலையில் எத்தகைய கட்டுப்பாட்டைக் கொண்டு வரவேண்டுமென்று விளக்க விரும்புகிறேன்.

நமக்கு வருகின்ற அன்னையின் அருளும் அதிர்ஷ்டமும் பெருமளவில் நம்முடைய மனநிலையைப் பொருத்ததாகும் என்பது மிகத் தெளிவான ஒருண்மை. அருளுக்கும் அதிர்ஷ்டத்திற்கும் புறம்பான விஷயங்கள் நம் செயல்பாட்டில் வெளிப்படாமலிருக்க வேண்டுமென்றால், மனநிலையை நாமொரு கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தால் அது சாத்தியமாகும். குறிப்பாக எரிச்சல், கோபம், பொறாமை, கெட்டெண்ணம் போன்ற உணர்வுகள் நம் மனநிலையை பாதிக்காமலிருக்க வேண்டும். இவை நம் மனநிலையை ஆக்கிரமித்துக் கொண்டு நம் செயல்பாட்டிலும் வெளிப்பட ஆரம்பித்துவிட்டால், அந்த அளவிற்கு அருளும் அதிர்ஷ்டமும் நம்மை விட்டு விலகிப் போய்விடும்.

செயல்பாட்டில் இவை வெளிப்படாமலிருப்பதற்கே நமக்கு நிறைய மனவுறுதியும் கட்டுப்பாடும் வேண்டும். மனநிலையிலும்கூட இவை நுழையாமல் மனதில் சஞ்சலம் ஏற்படாமலிருக்க வேண்டுமென்றால் அது மேலும் கடினமாகும். ஆன்மிக நிதானமும் சமநிலையும் (equality) உள்ளவர்களுக்குத்தான் மேற்கண்ட நிலை சாத்தியமாகும். மற்றவர்கள் எரிச்சல், கோபம், பொறாமை போன்ற உணர்வுகள் அவர்களுடைய செயல்பாட்டில் வெளிப்படாதவாறு ஒரு கட்டுப்பாட்டைக் கடைப்பிடித்தாலே போதும்.

நம்மை நோக்கி அன்னையின் அருளும் அதிர்ஷ்டமும் அதிகமாக வரவேண்டுமென்றால், அதற்கேற்றபடி நம்முடைய concentration மற்றும் receptivityம் அதிகரிக்க வேண்டும். எரிச்சல், கோபம் போன்றவை நம்முடைய concentrationஐ சிதறடிக்கின்றன. பொறாமை நம் மனநிலையை சுருங்க வைப்பதால், நமக்குண்டான opening குறைந்து போய், நம்முடைய receptivityம் குறைந்து போகிறது.

நம்முடைய கோபத்திற்கும் எரிச்சலுக்குள்ளாகின்றவர்கள் நம்மைவிட நிதானமும் concentraton-ம் அதிகமாக உள்ளவர்களாக இருந்தால், நம்மைத் தேடி வரும் அதிர்ஷ்டம் நம்மைத் தாண்டி அவர்களுக்குப் போய்விடுகின்றது. இதனால்தான் கோபத்திற்கு உள்ளாகின்றவர்கள், தம்முடைய அதிர்ஷ்டத்தை இழக்கின்றார்கள்.



பொறாமையுணர்ச்சியை வளர்த்துக் கொள்பவர்கள் அதனால் தமக்கு என்ன நஷ்டம் வருகிறதென்று தெரிந்தால் பொறாமை உணர்வை அண்டவே விடமாட்டார்கள். நம்மைவிட ஒருவர் சிறப்பாகவிருப்பதாகத் தெரிவதால்தான் நமக்கு அவர்கள் மேல் பொறாமையே வருகிறது. ஆனால் இதற்கு முன் அவர்கள் நமக்குக் கீழேயும் கூடவிருந்திருக்கலாம்.

இன்று நம்மைவிடச் சிறப்பாகவிருப்பவரை நாம் பாராட்டினோமென்றால் இன்று அவருக்குள்ள சிறப்புகள் நம்மை நாடி வரும். பாராட்டுவதற்குப் பதிலாகப் பொறாமைப்பட்டால் அவரிடம் முன்னாலிருந்த வேண்டாத விஷயங்களெல்லாம் நம்மை இன்று நாடி வரும். அவை கடன், திவால், வறுமை, அவமானம், உடல்நலக்குறைவு என்று பல்வேறு ரூபங்களில் வரலாம். இந்த உண்மை தெரிய வரும்பொழுது நாம் பொறாமையுணர்வை நம்மை அண்டவே விடமாட்டோமென்று நினைக்கிறேன்.

இறுதியாகச் சொன்னால், அன்னையை அதிகமாக நெருங்குவதற்கு உதவக்கூடிய இறையார்வம், சின்சியரிட்டி, நிதானம், நல்லெண்ணம், சேவை மனப்பான்மை, நேர்மை போன்றவற்றை வளர்த்துக் கொள்ள நமக்குச் சுதந்திரமும், அருளும் அதிர்ஷ்டமும் நம்மைவிட்டு விலகுவதற்குக் காரணமாக இருக்கக்கூடிய வேண்டாத விஷயங்களான சோம்பல், விரயம், கோபம், பொறாமை போன்றவற்றிலிருந்து நம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்கு மனநிலையிலும், செயல்பாட்டிலும் கட்டுப்பாடும் தேவை என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

## திருவுருமாற்றிய தெய்வீக அன்னை

*[ஜுன் இதழின் தொடர்ச்சி....]*

*S. அன்னபூரணி*

சங்கர் எழுதிய கடிதத்தைப் படித்தவுடன் கல்லுக்குள் ஈரம் கசிவதுபோல பார்வதம் கூட ஒரு நிமிடம் நெகிழ்ந்து போனாள். இந்தப் பேச்சு வார்த்தை நடந்து ஒரு மாதத்திற்குள் குமாரி லலிதா, திருமதி லலிதா சங்கர் ஆனாள். அவளுக்கு ஒன்று மட்டும் நன்றாகப் புரிந்தது. இது வாரா வாரம் தான் அன்னைக்குச் சேவை செய்ததன் விளைவாக ஏற்பட்ட பலன் என்பது.

‘கல்யாணியா வா வா’, என்று அன்போடு வரவேற்றாள் லலிதா. கல்யாணம் விசாரிக்க வந்திருந்த கல்யாணிக்கு லலிதாவின் எழில்மிகு தோற்றம் மிகவும் களிப்பைக் கொடுத்தது. லலிதா நாம் ஒன்றாகப் படிக்கும் காலத்திலேயே நினைத்துக் கொள்வேன். உனக்கு ஒரு தெய்வீக சக்தி இருக்கிறது. உனக்கு ஒரு சிறந்த எதிர்காலம் உண்டு என்று என் உள்மனசு சொல்லும். அது மாதிரியே நடந்தது. எவ்வளவு நிறைவாக இருக்கிறது தெரியுமா?’ என்றாள் ஆத்மார்த்தமாக.

‘ஆமாம் கல்யாணி 99 சதவிகிதம் இந்த உலகத்திலேயே நான்தான் அதிர்ஷ்டமானவள்; மகிழ்ச்சியானவள். எனக்குக் கிடைத்திருப்பதுபோல் ஒரு கணவரும் வாழ்க்கையும் வேறு யாருக்கும் கிடைத்திருக்காது.’

‘அது என்ன 99 சதவிகிதம். நூறு சதவிகிதம் என்றுதான் சொல்லேன்.’

‘கவனித்துவிட்டாயா? நான் சொன்னதை. என் கணவருக்கு கடவுள் பக்தி இதிலெல்லாம் நம்பிக்கை கிடையாது. ஆனால் என்னுடைய பூஜை புனஸ்காரங்களைத் தடை செய்யமாட்டார். பார்க்கப்



போனால் என் பூஜைக்குத் தேவையான சாமான்களை தாமே வாங்கி வந்து தருவார். ஆனால் தப்பித் தவறிக்கூட ஸ்வாமிக்கு நமஸ்காரம் செய்வதோ, ஸ்லோகம் சொல்வதோ, கற்பூரத்தைக் கண்ணில் ஒற்றிக்கொள்வதோ கிடையாது.’ ‘சரி போகட்டும் விடு. உன்னையாவது தடை செய்யாமலிருக்கிறாரே’ கல்யாணம் விசாரித்துவிட்டுக் கிளம்பி போனாள் கல்யாணி.

சற்றே மேடிட்ட வயிற்றோடு ஏற்கனவே களை பொருந்திய முகம் இன்னும் தாய்மைப் பூரிப்பில் மேலும் மெருகூட்டப்பட்டு வாயில் தாம்பூலம் மணக்க அமர்ந்திருந்தாள் லலிதா. சங்கர் சாய்வு நாற்காலியில் அமர்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்தான். சட்டென்று ஏதோ நினைவுக்கு வர பேப்பரை மடித்து வைத்துவிட்டுப் பேசினான்.

‘லலிதா உன்னை வெகுநாட்களாக ஒன்று கேட்க வேண்டுமென்று நினைக்கிறேன்.’

‘கேளுங்களேன்’ என்று சொல்லிக் கன்னம் குழிய சிரித்தாள். ‘நான் ஏன் உன்னை விரும்பித் திருமணம் செய்து கொண்டேன். ஏன் கடவுள் பக்தியே இல்லாத நாஸ்திகனாக இருக்கிறேன் என்று யோசித்திருக்கிறாயா?’

‘எப்பொழுதாவது அப்படித் தோன்றுவதுண்டு.’

‘பின் ஏன் என்னை இதுபற்றி ஒன்றும் கேட்கவில்லை?’

‘என்னைப் பொருத்தவரை என் தகுதிக்கு நீங்கள் என்னைத் தேடி வந்து திருமணம் செய்து கொண்டதே அதிகம். அது நான் வணங்கும் பாண்டி அன்னையின் அருளால் நடந்தது. மேலும் நீங்கள் என்னைவிட வயதிலும், அறிவிலும் எல்லாவிதத்திலும் மிகப் பெரியவர். உங்களைக் கேள்வி கேட்கும் தகுதி எனக்கில்லை என்று தோன்றுகிறது. அப்படித் தேவையாயிருந்தால் நீங்களே ஒரு நாள் விளக்குவீர்கள் என்று நம்பிக்கை இருந்தது.’

‘ஏதேது நான் நினைத்ததுபோல் நீ சாதாரணமான ஆள் இல்லை. புத்திசாலியாக இருக்கிறாயே. இப்பொழுது சொல்கிறேன் கேள். ஒரு காலத்தில் நானும் உன்னைப்போலத்தான். சிறுவயதிலேயே எனக்குப் பூணூல் போட்டுவிட்டார்கள். சந்தியா வந்தனம், காயத்ரி எல்லாம் ஒழுங்காகச் சொல்லுவேன். சமஸ்கிருதம் தெரியுமாதலால் நிறைய ஸ்லோகங்கள் சொல்லுவேன். ஆனால் விதி விளையாடிவிட்டது. என் உயிருக்குயிரான அம்மாவை இழந்துவிட்டேன். என் அப்பா இரண்டாவது திருமணம் செய்து கொண்டார். என் சித்தியிடம் நான் பட்ட கொடுமைகளை விவரித்துச் சொல்ல வார்த்தைகளில்லை. சுபாவமாகவே நான் அன்புக்காக ஏங்குபவன். அந்த அன்பை வாரி வழங்கிய என் தாயை இழந்த சோகம் ஒரு புறமிருக்க, கடுமையைத் தவிர கருணை காட்டத் தெரியாத சித்தியின் குணத்தால் வாழ்க்கை வெறுத்துப் போய் நாஸ்திகனானேன். சித்தியைப் பார்த்ததிலிருந்து பெண்களைக் கண்டாலே வெறுப்பாயிருந்த என் வாழ்வில் தென்றலாக நீ குறுக்கிட்டாய். ஞாயிற்றுக்கிழமைகளில் வீட்டிலிருக்கும்பொழுது நீயும் உன் சித்தியும் பேசும் பேச்சுக்கள் என் காதில் விழும். ஒருவாறு உன் நிலையை யூகித்துக் கொண்டேன். அதற்காக உன்மேல் இரக்கப்பட்டு உன்னைத் திருமணம் செய்து கொண்டதாக நினைத்து விடாதே. நானும் அன்புக்காக ஏங்கும் ஒரு ஜீவன், நீயும் அன்புக்காக ஏங்கும் ஒரு ஜீவன். ஏன் இருவரும் வாழ்க்கையில் இணைந்து பரஸ்பரம் ஒருவருக்கொருவர் அன்பை பரிமாறிக் கொள்ளக்கூடாது என்ற எண்ணத்தில்தான் இந்தத் திருமணத்தை விரும்பினேன். நான் எதிர்பார்த்தது வீண் போகவில்லை.’

இதைக் கேட்ட லலிதா அவன் மீது மேலும் அன்பு பொங்க விழிகளை அகல விரித்துப் பார்த்தாள். ஆதரவாக அவன் கைமேல் தன் கையை வைத்து தன் அன்பைக் கண்களாலேயே வெளிப்படுத்தினாள்.

லலிதாவுக்கு பிரசவ நேரம் நெருங்குவதற்கு 10 நாட்களுக்கு முன்பே தஞ்சாவூரில் ஜாகை எடுத்துத் தங்கிவிட்டான் சங்கர்.



அங்குள்ள ஆஸ்பத்திரியில்தான் நல்ல கவனிப்பு இருக்கும் என்ற நம்பிக்கை.

‘என்னங்க எனக்கு என்னமோ மாதிரி இருக்கு. லேசாக இடுப்பை வலிக்கிறது.’ உடனே ஒரு டாக்ஸி எடுத்துக் கொண்டு வந்து கைத்தாங்கலாகப் பிடித்து காரில் ஏற்றி ஆஸ்பத்திரிக்கு அழைத்து வந்தான். டாக்டர் அவளை செக் அப் செய்யும்போதே அவர் முகம் இருண்டது.

‘மிஸ்டர் சங்கர், அயாம் சாரி. உங்கள் மனைவிக்கு எமெர்ஜென்ஸி ஆப்பரேஷன் செய்து குழந்தையை எடுக்க வேண்டும். உள்ளே கொடி சுற்றிப் போய் குழந்தை இறந்துவிட்டது.’

சங்கருக்கு உலகமே சுற்றுவது போலிருந்தது. இதற்குள் படுத்துக் கொண்டிருந்த லலிதாவின் வாயில் நுரை தள்ளி இழுப்பு வந்தாற்போல் கைகால்கள் விலுக்விலுக்கென்று இழுக்க ஆரம்பித்தன. பார்க்க மிகவும் பரிதாபமான காட்சியாக இருந்தது. உடனே ஆக்ஸிஜன் சிலிண்டர் வரவழைக்கப்பட்டு அங்கே குழுமியிருந்த டாக்டர்கள் அனைவரும் அவளை கவனிக்க ஆரம்பித்தனர். உடனடியாக அவளை ஆபரேஷன் தியேட்டருக்கு அழைத்துச் சென்றனர். இடிமேல் விழுந்த இடியைத் தாங்க முடியாமல் துவண்டு போனான் சங்கர்.

‘என்னங்க நீங்க எத்தனை நாள்தான் லீவில் இருப்பீங்க. மெல்ல மெல்ல நான் வேலைகளைக் கவனித்துக் கொள்கிறேன்’ பச்சை மரம் போலிருந்த அவள் உடல் பட்டமரம் போல் ஆகியிருந்தது. நீண்ட கருங்கூந்தல் எண்ணெய் காணாமல் வறண்டு போய் செம்பட்டை படிந்திருந்தது. குழி விழுந்த கண்கள். ஊற்றாய்ப் பொங்கி வந்த மகிழ்ச்சி வடிந்து போய்விட்டிருந்தது. சோலைவனமாய் இருந்த வீடு பாலைவனமாய் மாறியிருந்தது. சங்கர் அலுவலகம் போனதும் அன்னை படத்தின் முன்பு அமர்ந்து புலம்புவாள். ‘அம்மா இது நீ கொடுத்த வாழ்வல்லவா? இதில் ஏன் இந்தக் கஷ்டம் வந்தது? நான் ஏதாவது தவறு செய்து விட்டேனா? என்னுடைய தவறு

என்னவென்று எனக்குத் தெரியவில்லை. நீயே குறையைக் களைந்து விடு’ என்று தினமும் புலம்புவாள்.

‘லலிதா ஒரு நல்ல செய்தி. எனக்கு பாண்டிச்சேரிக்கு மாற்றல் ஆகியிருக்கிறது. நமக்கும் இடமாற்றம் இருந்தால் நல்லது தானே.’

‘பாண்டிக்கா?’

லலிதாவின் மகிழ்ச்சியை விவரிக்க வார்த்தைகளேயில்லை.

வாராந்திர தியானத்தில் மட்டும் அன்னையை தரிசித்துவிட்டு வந்தவள் அங்கு வருபவர்களெல்லாம் பாண்டிச்சேரி, தரிசன நாளுக்குப் போனேன் என்று சொல்லும்போது தனக்கு அந்த பாக்கியம் கிட்டுமா என்று ஏங்கியதுண்டு. சுபாவமாகவே எதையும் கேட்டுப் பழக்கமில்லாததால் அவள் கணவனிடம் கூட அவள் தன்னை அழைத்துப் போகுமாறு கேட்டதில்லை. இப்பொழுது அன்னையே தனக்கு அழைப்பு விடுப்பது போலிருந்தது. வெகுநாட்களுக்குப் பின் அவள் முகம் பழையபடி பிரகாசித்தது.

ஆசிரமத்திற்கு அருகிலேயே அன்னையின் அருளால் வீடு கிடைத்து தினமும் சமாதி தரிசனம் செய்யும் பாக்கியம் கிடைத்தது. ஆறு மாதங்கள் விரைவாக ஓடின.

‘என்னங்க முதல் குழந்தை இறந்து பிறந்ததால் நமக்குக் குழந்தையே வேண்டாமென்று சொல்வது நியாயமில்லை.’

‘லலிதா எனக்கு அந்தக் குறையேயில்லை. நீ எனக்குக் குழந்தை, நான் உனக்குக் குழந்தை’ என்று சொல்லிப் புன்னகைத்தவாறே அவளை சமாதானப்படுத்தினான்.

‘எனக்கு அப்படித் தோன்றவில்லை. தாய்மை என்பது ஒவ்வொரு பெண்ணுக்கும் கிடைக்கக் கூடிய வரப்பிரசாதம். நமக்கே உடலில் இயல்பாகக் குறையிருந்து குழந்தை பிறக்காவிட்டால் பரவாயில்லை. ஓர் அனாதைக் குழந்தையைத் தத்து எடுத்து வளர்க்கலாம். ஆனால் ஏற்கனவே ஒரு முறை கருத்தரித்த காரணத்தால் நமக்குக் குழந்தை பிறக்காமலிருக்க வாய்ப்பில்லை.’



‘என்ன லலிதா ஆச்சரியமாக இருக்கிறது எதற்குமே என்னை எதிர்த்து ஒரு சொல் கூட பேசாத நீ இந்த விஷயத்தில் இப்படித் துணிச்சலுடன் வாதிடுகிறாயே.’

‘எந்தப் பெண்ணும் தாய்மைப் பதவியை மட்டும் விட்டுக் கொடுக்கமாட்டாள். உங்களுக்கு வேண்டுமோ இல்லையோ எனக்குக் கண்டிப்பாக ஒரு குழந்தையாவது வேண்டும். ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் பரவாயில்லை.’

சங்கர் திகைத்துத் தடுமாறினான். லலிதா இந்த அளவுக்குப் பிடிவாதமாயிருப்பாள் என்று அவன் எதிர்பார்க்கவேயில்லை.

லலிதா என்னை மன்னித்துவிடு. காரணமாகத்தான் நான் குழந்தை வேண்டாமென்று சொன்னேன். உனக்கு முதல் பிரவசத்தின் போது ஆபரேஷன் செய்த டாக்டர் சொன்னார் மிஸ்டர் சங்கர் உங்கள் மனைவிக்கு இயற்கையிலேயே கர்ப்பப்பையில் கோளாறு இருக்கிறது. இனிமேல் அவர் கருத்தரித்தால் குழந்தையின் உயிருக்கு மட்டுமல்ல உங்கள் மனைவியின் உயிருக்கும் ஆபத்து. ஆகவே குழந்தை வேண்டும் என்ற ஆசையை நீங்கள் விட்டுவிடுவது நல்லது.

தீக்கங்குகளை நெஞ்சில் வாரிக் கொட்டியதுபோல் துடிதுடித்துப் போனாள் லலிதா. கண்ணிலிருந்து கரகரவென்று நீர் வழிந்தது. சங்கரின் கைகளிரண்டையும் பற்றி எடுத்து அதில் முகம் புதைத்து தேம்பித் தேம்பி அழுதாள். ‘அழாதே லலிதா. நீ அழுதால் எனக்குப் பொறுக்காது. நீ சந்தோஷமாக இருக்க வேண்டும். எனக்குக் குழந்தை வேண்டுமென்பதை விட நீ எனக்கு வேண்டும். உன்னை இழக்க நான் சம்மதிக்க மாட்டேன்.’

பதில் சொல்லாமல் மேலும் தேம்பினாள் லலிதா.

‘நான் ஏதாவது தவறாகச் சொல்லிவிட்டேனா?’

‘இல்லை உங்களால் தவறே செய்யமுடியாது. நீங்கள் உங்கள் அபரிமித அன்பினால் என்னைக் கொல்கிறீர்கள். இப்படிப்பட்ட தெய்வத்திற்கு வாரிசாக ஒரு குழந்தையைக் கொடுக்க முடியாத

பாவியாக நான் இருக்கிறேனே. என் மீது பலன் கருதாது அன்பு செலுத்தும் இப்படி ஒரு ஜீவனா? இவரைக் கணவனாகப் பெற என்ன தவம் செய்தேன்? என்று நினைத்து நெகிழ்கிறேன். ஒரு புத்தகத்தில் படித்தேன். நமக்கு நடந்த எந்த நல்லது நினைவுக்கு வந்தாலும் அன்னையை நன்றியோடு நமஸ்கரிக்க வேண்டும் என்று. அப்படிப் பார்த்தால் அன்னைக்கு எத்தனைக்கு என்று நான் நன்றி சொல்வேன்?' என்று சொல்லி நாத்தழுதழுத்தாள்.

மாதங்கள் உருண்டோடின மகிழ்ச்சியுமில்லாமல், சோகமுமில்லாத ஒரு சூழ்நிலையில் காலம் ஓடிக் கொண்டிருந்தது. இருந்தாலும் ஒரு வெறுமை விரவியிருப்பதை இருவருமே உணர்ந்திருந்தனர். அன்று வெள்ளிக்கிழமை, பௌர்ணமி இரண்டும் சேர்ந்து அமைந்திருந்தது. வழக்கம்போல் சமாதி தரிசனம் செய்துவிட்டு மாலையில் அன்னையைப் பிரார்த்தித்துவிட்டுப் படுத்தாள். இரவு உறங்க ஆரம்பித்து சிறிது நேரம்தான் ஆயிருக்கும். திடீரென்று வீடெங்கும் ஒளி வெள்ளம். தூய வெள்ளை உடையில் அன்னை அவளருகே வந்து அமர்ந்து 'குழந்தாய்! லலிதா, உனக்கு மழலைச் செல்வம் வேண்டுமா? ஒரு முறை உன் கணவனோடு வந்து சமாதி தரிசனம் செய்து வேண்டிக் கொள்.' சட்டென்று காட்சி மறைந்தது. வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தாள் லலிதா.

'என்னங்க, என்னங்க எழுந்திருங்க'.

'என்னம்மா இது சின்னக் குழந்தை மாதிரி. ஏதாவது கனவு கண்டு பயந்திட்டயா?'

'இல்லைங்க. அன்னை என் கனவில் வந்தாங்க. உனக்குக் குழந்தை பாக்கியம் வேண்டுமானால் உன் கணவருடன் வந்து சமாதி தரிசனம் செய் என்று சொல்லி மறைந்துவிட்டார்.'

'சரி இதையெல்லாம் நாளைக்கு பேசிக்கொள்ளலாம். பேசாமல் படு' மறுபுறம் திரும்பிப் படுத்துக் கொண்டு உறங்க ஆரம்பித்தான்.

லலிதாவுக்கு ஆனந்த அதிர்ச்சி தாங்கவில்லை.



'அம்மா என் மீது உனக்கு இவ்வளவு அன்பா? தாயில்லாத எனக்குத் தாயாக நீ வந்தாயா?'

நெடுநேரம் தான் கண்ட காட்சியை நினைவுக்குக் கொண்டு வந்து மகிழ்ந்து போனாள்.

'என்ன லலிதா இப்படிப் பிடிவாதம் பிடிக்கிறாய்? சரி உன் ஆசைக்காக நான் வந்து அன்னையை வேண்டிக் கொள்கிறேன் என்று வைத்துக் கொள். நீயும் அவர் அருளால் கருத்தரிக்கிறாய் என்றாலும் டெலிவரி ஆகி நல்லபடியாக நீ பிரசவிக்கும்வரை எனக்கு எத்தனை டென்ஷன்? அதற்காக உன் உயிர் விஷயத்தில் நான் ரிஸ்க் எடுக்கத் தயாராயில்லை'. உடனே அவன் வாயைப் பொத்தினாள் லலிதா.

'அப்படிச் சொல்லாதீர்கள். அன்னையை நம்பிக்கையுடன் பிரார்த்தியுங்கள். சத்தியமாகச் சொல்கிறேன். என்னுடைய உயிர் என்றாவது ஒரு நாள் பிரியப் போகிறது. அதற்குப் பயந்து கொண்டு என் தாய்மைப் பேற்றை இழக்க விரும்பவில்லை. நீங்கள் இதற்கு சம்மதிக்காவிட்டால் நான் உங்களிடம் வேறொரு விண்ணப்பம் அளிப்பேன். அதற்காவது சம்மதிக்கவேண்டும்.'

'என்ன அது?'

'நீங்கள் இரண்டாவது திருமணம் செய்து கொள்ளவேண்டும்.' தூக்கிவாரிப் போட்டது சங்கருக்கு. அப்பொழுது தான் அவள் இந்த முடிவில் எவ்வளவு தீவிரமாக இருக்கிறாள் என்பது புரிந்தது.

'சரி லலிதா உன் கோரிக்கைக்கு சம்மதிக்கிறேன். வாழ்க்கை என்பது ஒரு பந்தயந்தானே.'

'ஆனால் அன்னையின் துணை இருந்தால் அதில் என்றும் ஜெயம்தான். சரி இன்னும் ஒரு நிபந்தனை போடுகிறேன். அன்னையின் அருளால் நான் பெற்றுப் பிழைத்துவிட்டால், பிழைத்துவிட்டாலென்ன, நிச்சயம் அது நடக்கும். அப்பொழுது நீங்களும் அன்னை பக்தராகி விடுவீர்களா?'

சங்கர் சிரித்தான். ‘அந்த அற்புதம் மட்டும் நடந்துவிடட்டும். நான் அன்னைக்கு பரிபூரணமாக அடிமையாகிவிடுவேன்.’

அடுத்த நாள் தம்பதி சமேதராக சமாதி தரிசனத்திற்கு கிளம்பினர். லலிதாவுக்கு கால் தரையில் பாவவில்லை. சங்கர் ஆசிரமச் சூழலைப் பார்த்து அதிசயப்பட்டுப் போனான். இப்படி ஒரு அமைதியான இடத்தை அவன் எங்குமே பார்த்ததில்லை. அங்கு சேவை செய்து கொண்டிருந்த ஆசிரமவாசிகளெல்லாம் தேவதைகளாக அவனுக்குத் தோன்றினர். அங்கிருந்த ஒரு தெய்வீகச் சூழல் அவனைக் கவர்ந்தது.

‘கங்கிராட்ஸ் மிஸ்டர் சங்கர். உங்கள் மனைவி தாயாகப் போகிறார்.’ சங்கருக்கு மகிழ்ச்சியும் பயமும் கலந்த ஓர் உணர்வு ஏற்பட்டது. இதைப் புரிந்து கொண்ட லலிதா இதோ பாருங்கள் அன்னையின் பொறுப்பில் ஒரு விஷயத்தை விட்ட பின்பு நாம் அதைப் பற்றி நினைக்கக் கூடாது. அப்படி நினைத்தால் அன்னை சக்தி அங்கு வேலை செய்ய அது தடையாக இருக்கும்.

‘எனக்கு இதெல்லாம் தெரியாது. நான் உன்னை மாதிரி புத்தகங்கள் எல்லாம் படிப்பதில்லை. நான் ஒரு சாதாரண மனிதன். என்ன இருந்தாலும் முதல் டெலிவரியின்போது நடந்ததை மறக்க முடியவில்லை. அந்தக் காட்சி மீண்டும் மீண்டும் வந்து என்னை பயமுறுத்துகிறது. நான் என்ன செய்வேன்?’

‘வாஸ்தவம்தான். அது மனித இயல்புதான். அப்படி அது நினைவுக்கு வரும் போதெல்லாம் நினைவை சமர்ப்பணம் செய்யவேண்டும்.’

‘சரி உனக்காக இதை செய்கிறேன்.’

பிரசவ நாள் நெருங்கியது. லலிதாவுக்கு லேசாக வலி எடுத்தவுடனேயே அவளை ஆஸ்பத்திரியில் கொண்டு சேர்த்துவிட்டான். லலிதா முனகலுடன், ‘எனக்குத் துணையாக அன்னையின் பிளெஸ்ஸிங் மட்டும் கொடுங்கள். நீங்கள் நேராக



சமாதிக்குப் போய் பிரார்த்தனை செய்து கொண்டிருங்கள். பங்கஜம் மாமி மட்டும் அருகில் இருந்தால் போதும்.’ சங்கர் திகைத்தான். ‘என்ன இது லலிதா?’

‘ப்ளீஸ் நீங்கள் தயவு செய்து நான் சொன்னதைச் செய்யுங்களேன்.’ அவளைப் பிரிய மனமில்லாமல் கனத்த இதயத்துடன் ஆசிரமத்தை நோக்கி விரைந்தான். அவன் மனச்சாட்சி பேசியது. நீ லலிதாவின் திருப்திக்காக இந்த முடிவை எடுத்துவிட்டாய். நீயும் அவளைப்போல் நம்பிக்கை வைத்துப் பிரார்த்தித்தால்தான் அவளுடைய ஆசையை நிறைவேற்றி வைத்ததாக ஆகும்.

சமாதி அருகில் சென்று அமர்ந்தவன் தன்னை மறந்தான். உலகை மறந்தான் **Om Mother, Om Mother** என்று தீவிரமாக அழைக்க ஆரம்பித்தான்; அன்னையை மானசீகமாக லலிதா படுத்திருந்த நர்ஸிங் ஹோமுக்கு அனுப்பி வைத்தான். பிரசவம் பார்க்கும் டாக்டர்களை அன்னையாக உருவகித்தான். சிறிது நேரம் அதையும் மறந்து ஆழத்திற்குப் போனான். எவ்வளவு நேரம் ஆகியிருக்குமோ தெரியாது. கண்களை விழித்தபோது பரவசத்துடன் பங்கஜம் மாமி நின்று கொண்டிருந்தாள். அவன் காதருகில் குனிந்து ‘சுகப்பிரசவம் லலிதாவிற்குப் பெண் குழந்தை பிறந்திருக்கிறது. தாயும் சேயும் நலம்.’

நன்றியால் நெகிழ்ந்த சங்கர் அன்னையை சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தான். ‘என்னை ஆட்கொள்ளவந்த அன்புத் தாயே, இன்று முதல் நான் உங்கள் அடிமை.’

பாண்டிச்சேரியிலிருந்து மாற்றல் ஆகி விடுமென்பதற்காக பிரமோஷன் வேண்டாமென்று எழுதிக் கொடுத்துவிட்டான். தினமும் சமாதி தரிசனம் செய்யத் தொடங்கிவிட்டான். நாஸ்திகனாக இருந்த சங்கர் இப்போது தினமும் அன்னையின் படத்தின் முன்பு நின்று நீங்கள் மட்டுமே எனக்கு வேண்டும் என்று பிரார்த்திக்கிறான். இந்தக் காட்சியைப் பூரிப்புடன் பார்த்து மகிழ்ந்து போகிறாள் லலிதா.

*முற்றும்.*

❋ ❋ ❋

Consultancy

## “பாரிஸ் கம்ப்யூட்டர் கம்பனி”

கம்ப்யூட்டரின் பெருமையை உலகம் - இந்தியஉலகம் - முழுவதும் அறியாத நேரம். கம்ப்யூட்டர் புது உலகக் கருவியாக - an evolutionary instrument - நம்மிடையே இருக்கிறது என்பதை உலகம் அறியாது. அதன் அபாரத் திறமைகளை உலகம் அளவுகடந்து அறியும். உலகமக்களை உய்விக்க அவதாரப் புருஷர்கள் வந்தனர். மின்சாரம் உலகில் பெருகியபொழுது லெனின், ‘மின்சாரம் + சோவியத் = சுபிட்சம்’ என்று சூத்திரம் எழுதினார். ரயில்வே முதலில் போடப்பட்ட பொழுது 60 தலைமுறைகளில் dukes, lords, knights பெருநிலச்சுவான்தார்கள் சம்பாதித்ததை ஒரு ரயில்வே காண்ட்ராக்டர் 20 ஆண்டுகளில் சம்பாதித்தார். நாம் காண்பது வருமானம். ரயில்வே சமூகத்தையே புரட்சிகரமாக மாற்றியது.

**இன்று கம்ப்யூட்டர் டெக்னாலஜிகல் அவதாரம்**

என்பதை இந்தியாவில் இன்றும் சர்க்கார் உணரவில்லை. சொஸைட்டி சார்பாக மத்திய சர்க்கார் அதிகாரிகளைச் சந்தித்து 15, 20 ஆண்டுகட்கு முன் இதை எடுத்துச் சொல்லவும், கம்ப்யூட்டர் தொழிலை நாட்டில் பிரபலமாக்கவும் நாம் ஆர்வம் கொண்டோம். சர்க்கார் ஆர்வமாகக் கேட்டுக்கொண்டது. சர்க்காரின் அனுமதியுடன் உலகில் சில கம்ப்யூட்டர் கம்பனிகளைப் பார்த்து, இந்தியாவில் என்ன செய்யமுடியும் என்று விசாரிக்க முனைந்தோம்.

- **வேறு வேலைகள் இருந்ததால் அன்பர் 4, 5 நாடுகட்கும் போக வேண்டியிருந்தது அன்பர் டிக்கட்டைப் பார்த்தவர் 34 இடங்களுக்குப் போவதைக் கண்டு வியந்தார்.**
- **பிரயாணம் அலுப்பு தரும்.**
- **நாம் மேற்கொண்ட வேலைகளைச் செய்யத் தேவையான சக்தி உடலாலோ, மனத்தாலோ தரமுடியாத சக்தி.**



- **வேலை ஆன்மீக வேலை என்பதால் ஆன்மீக சக்தி தேவை. அதற்கு ஓரிடமாக உட்கார்ந்து தியானம் செய்ய வேண்டும். பிரயாணத்தில் அந்த சக்தியைப் பெற முடியாது.**
- **பாரிசில் ஒரு பெரிய கம்பனி** Vice President **அன்பரை சந்திக்க ஒத்துக் கொண்டார்.**

அன்பர் அக்கட்டடத்திற்கு வரும்பொழுது உடல் தளர்ந்து, உள்ளம் சோர்ந்து, கண் பூத்து, தலை சுற்றும் நிலையில் வந்தார். இன்னும் 1½ மணி நேரத்தில் ஒரு பெரிய மனிதனைப் பார்த்து பெரிய விஷயம் பேசவேண்டும். கிடைக்காத appointment மீட்டிங் கிடைத்தது. என்ன செய்வது? Management சட்டம் என்ன சொல்கிறது? உடலாலும், உள்ளத்தாலும் முடியாவிட்டால், அதைக் கடந்தால் முடியும். Management சட்டம் முடியாதது இல்லை என்று கூறுகிறது. அன்பர் முடியாதவற்றைக் கடந்து, முடியும் என்ற ஆழத்தை அடைந்து அன்னையைக் கூப்பிட்டார். காற்றடைத்த டயர்போல நெஞ்சும், உடலும் தெம்பால் பூரித்தன. இனி 10 டன் சுமையை லாரி இழுக்கும்.

**அன்பருள்ளிருந்து சக்தி அபரிமிதமாகப் பொங்கி எழுந்தது.**

❊ ❊ ❊


**சொஸைட்டியின் புதிய வெளியீடுகள்**

**சமூகம் - அதிர்ஷ்ட சாகரம்** - கர்மயோகி

**சச்சிதானந்தம்** - வசந்தா

விலை : ரூ. 20/- (each)

*தபாலில் பெற ரூ. 10/- சேர்த்து M.O. செய்யவும்.*

## பிரார்த்தனை பலிக்க வேண்டும்

தம்பி - Rapid opening of book ஒரு புத்தகத்தை திறந்து பார்த்தால் அது நமக்குரிய கருத்தைச் சொல்வதை செய்து பார்த்தேன்.

அண்ணன் - அன்னை அதற்குரிய நிபந்தனைகளைக் கூறியதைப் படித்திருக்கிறாயல்லவா?

1. அமைதியான மனம்.
2. கூர்மையான கத்திபோன்ற கருவியால் புத்தகத்தைப் பிரிக்க வேண்டும்.
3. புத்தகம் அதற்கேற்ப அமைய வேண்டும். அதாவது கதை, கட்டுரை போலில்லாமல் பல சுருக்கமான கருத்துகள் அடங்கியதாக இருக்கவேண்டும்.

தம்பி - சாவித்திரி நமக்குரியதை துல்லியமாகக் கூறும். அது சமயத்தில் புரியவில்லை என்பதால் புதியதாக வெளிவந்த செய்திகள் நிறைந்த புத்தகத்தை நான் பயன்படுத்துகிறேன். இதில் தமிழில் எழுதியிருக்கிறது. தனித்தனி செய்தியாக இருப்பது சௌகரியமாக இருக்கிறது. இன்று மையத்திலிருந்து சமாதி புஷ்பம் எடுத்துவர வேண்டியவர் வரவில்லை. வேறு வேலையிருப்பதாகச் சொன்னார். இந்த புத்தகத்தைப் பிரித்துப் பார்த்தேன்.

> **“அருளை நாம் அறியவில்லை. பிரசாதத்தின் பெருமை தெரிவதில்லை. அருள் நம்மைத் தேடிவரும்பொழுது பிரசாதத்தை நாம் புறக்கணிப்பது வாய்ப்பை இழப்பது எனத் தெரியவில்லை.”**



என்றிருந்தது. புத்தகம் பிரசாதத்தைப் பற்றியே பேசுவது ஆச்சரியமாக இருந்தது. எனக்குப் படித்ததைச் சுருக்கமாகச் சொல்ல முடியவில்லை. ‘செய்தி’ நான் படித்தது மிகவும் தெளிவாகப் பொருத்தமாக இருந்தது.

அண்ணன் - அருள் பிரவாகமாக இருக்கிறது. நமக்குத் தெளிவு போதாது. நான் கோடி வீட்டிற்குப் போயிருந்தேன். அது வசதியில்லாத வீடு. ஒரே நாற்காலியிருந்தது. எப்படி இருவர் உட்காருவது, நின்று கொண்டே பேசிவிட்டு வந்துவிட்டேன். மறுநாள் மையம் வந்திருந்தார் அவர். வீட்டில் உட்காரவும் வசதியில்லை என்றார். அருகிலிருந்தவர் ஏன் அப்படிக் கூறுகிறீர்கள்? ஒரு நாற்காலி என்ன 10 வரும் என்றார். இது போன வருஷச் செய்தி. இப்பொழுது எப்படி வந்தது எனத் தெரியவில்லை. அவர் வீட்டில் சரியாக 10 நாற்காலிகள் உண்டு. சில cushion போட்ட sofa போலிருக்கிறது.

தம்பி - மையத்தில் பேசினாரல்லவா? சூழல் சக்தி வாய்ந்தது. சொல் பலித்துவிட்டது. அருள் பிரவாகமாக இருப்பது உண்மைதான். நம் தெரு பள்ளியில் வேலை செய்யும் ஆயாவுக்கு அன்னை மீது நம்பிக்கை அதிகம். அதன் அனுபவம் ஆச்சரியமானது. சம்பளம் ரூ.400/- எப்படி குடும்பம் நடத்துவது? 1 கிராம் பவுனில் செயின் வாங்க ஆசை! அந்த ஆசையால் செயின் கழுத்தை அரிக்க ஆரம்பித்தது. ஓகோ! ஆசை தப்பு என்று புரிந்து மனம் அடங்கியது. ஒரு 10 நாளுக்குள் அந்த பள்ளிக்கூட முதலாளி வீட்டில் வந்து 2 நாள் வேலை செய்யச் சொன்னார்கள். வேலையைப் பார்த்து சந்தோஷப்பட்டு அவர் மாமியார் 2½ பவுன் செயின் செய்து கொடுத்துவிட்டு, “உனக்கு பணம் கிடைக்கும்பொழுது விலையைக் கொடு” என்றார். அது 8500ரூபாய், எப்படி

ரூ.400 சம்பளத்தில் என்ன செய்வது? அன்னைவிட்ட வழி எனச் செயினை வாங்கி வந்தார். தொடர்ந்து பள்ளிக்கூடத்திற்கு tour வருபவர்கள் அதிகமாயிற்று. போகும்பொழுது ஆயாவுக்கு ஏதாவது கொடுப்பார்கள். சம்பளத்திற்குச் சமமாக இது வர ஆரம்பித்தது. பெரிய பணக்கார அம்மா வந்தார். அவர் ரூ.2000 கொடுத்தார். அதன்பிறகு 2 பேர் ரூ.50+0, ரூ.1000 எனக் கொடுத்தார்கள். அந்த 1 வருஷத்தில் ரூ.7000 சேர்ந்துவிட்டது! ஆயாவுக்கு எதுவுமே புரியவில்லை. நான் யாரிடமும் எதுவும் சொல்ல முடியாது. சொன்னால் எது எப்படிப் போகும் என பயமாக இருக்கிறது. மதர் பெரிசு, மதர் மதர்தான், என் வாழ்வில் இதுபோல் நடந்ததேயில்லை" என்று என்னிடம் அந்தரங்கமாகச் சொல்லிப் பரவசப்பட்டார். ரூ.400 சம்பளம், மேல் காசு ரூ.7000எப்படி நம்புவது?

அண்ணன் – அன்னை செய்வது ஏதாவது நம்ப முடியும் காரியமாக இருக்கிறதா? எல்லாமே கதையில் படிப்பதுபோல் தானிருக்கிறது. அன்னை என்பது என்ன என நாமறியவில்லை.

தம்பி – பிரம்மா, சிவன், விஷ்ணு, இந்திரன், லக்ஷ்மி, சரஸ்வதி, முருகன், விநாயகர், ஆத்மா (Self), புருஷன், ஈஸ்வரன் இவைகட்குள்ள வேறுபாட்டை விளக்கி, அதன் பிறகு அன்னை என்பதை விளக்கினால் புரியும்.

அண்ணன் – நீ கூறிய அத்தனை கடவுள்களும் தெய்வலோகத்திற்கு overmind-க்கு உரியவர்கள். இவர்களுடைய ஆதி சத்திய ஜீவியம். இத்தனை கடவுள்களும் மனத்தின் வகையைச் சார்ந்தவர்கள். அளவு பூமி அளவானாலும், சக்தி பெரியதாகவும், மனித குணம் ஓரளவுண்டு. கோபம், போட்டி போன்றவையும் உண்டு.






1. Absoulte என்பது ஆதி. Self என்பது க்ஷர, அக்ஷர பிரம்மமாகும்.

இதில் சத் என்பது பிரம்மம், புருஷா, ஈஸ்வரா எனப் பிரிவதை மட்டும் தனியாக எழுதினால்,



இந்திய ரிஷிகள் பிரம்மம் எனக் கூறுவது க்ஷர பிரம்மம், அக்ஷர பிரம்மம் என்பவையாகும். கீதை அடுத்த கட்டத்தில் புருஷோத்தமனைப் பற்றிக் கூறுகிறது. க்ஷர, அக்ஷர பிரம்மங்கள் புருஷோத்தமனில் அடக்கம். அன்னையின் பிறப்பிடம் 'சித்'. சத் என்பதை ஸ்ரீ அரவிந்தர் Self Conscious Being என்கிறார். அதுவே மூன்றாகப் பிரிந்து தெரிகிறது. பிரம்மம்(Absolute) என்பது சிருஷ்டிக்கு அப்பாற்பட்டது. பிரம்மம் Self என்பது உலகுக்கு அப்பாற்பட்டதேயானாலும், சிருஷ்டிக்குட்பட்டது. அன்னை இவற்றிற்கு அப்பாற்பட்டவர்.

*தொடரும்......*

❊ ❊ ❊

**அடுத்த மாதத்தில் வரும் தரிசன நாள்**

**ஆகஸ்ட் 15 பகவானின் ஜென்மதினம்**

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 177, Pappammal Koil Street, Pondicherry-12 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.

Editor: Karmayogi

## மரமல்லிகை, நாகலிங்கப்பூ

தானே நம்மைத் தேடிவரும் மலர்கள் நம் மனநிலையை, சூழ்நிலையை, நடந்தவற்றை, சற்று நேரத்தில் நடக்க இருப்பதைக் காட்டுவது, எங்கோ ஓர் ஸ்தாபனம் ஆயிரம் பேர் மூலமாகச் செயல்படுவதுபோல் தெரியும்.

'ஜீவனுள்ள மலர்கள்' எழுதி முடித்து முன்னுரை எழுதும்பொழுது வழக்கத்திற்கு மாறாக ஸ்ரீ அரவிந்தர் அறையிலிருந்து 2 சிவந்த ரோஜா மலர்களை என் கையில் கொடுத்தனர்.

சமாதி புஷ்பங்களை விவரமே அறியாதவர் கூடையோடு கொண்டுவரும்பொழுது சந்தோஷம் பொங்க வந்து நின்றார். படிப்பில்லாதவர், அன்னையைப்பற்றிக் கேள்விப்படாதவர். கூடையைக் கொண்டுவந்தது மட்டுமே அவர் செய்தது. 'இவ்வளவு சந்தோஷம் பொங்கினால், கூடையில் என்ன மலர்கள் இருக்கும்?' எனத் தேட நினைத்தேன். எனக்கு கிடைக்காத மலர் Joy, சந்தோஷம். அது ஒன்று தெரிந்தது. அவர் சந்தோஷத்திற்கு எனக்குக் காரணம் புரிந்தது. அடுத்த சந்தோஷ மலரும் கண்ணில் தென்பட்டது. அப்படிக் கிடைத்தவை 7,8 மலர்கள்.

'மௌனம்' என்ற மலர் சீசனில் கிடைக்கும். வீட்டிலேயே மலர்ந்தாலும், வீடு அமர்க்களமானால், மலர் உள்ளே வாராது. அது வீட்டிற்கு வரும் சமயம் தியானம்போல் மௌனம் குடி கொள்ளும்.

நம் வீட்டு சூழ்நிலைக்கும், தானே வரும் மலர்கட்கும் உள்ள தொடர்பு அற்புதம்.

நமக்குப் பிடித்தவை சில இறைவனுக்கு விலக்கு. இறைவனுக்குப் பவித்திரமான ஒரு சில செயல்களை சமூகம் தவறு, பாவம் எனவும் கூறும். அதுபோன்ற செயலை நெஞ்சு நிறைந்து செய்தவர் மனம் லேசான கேள்வியை எழுப்பியது. அடுத்த நிமிஷம் பெரிய தட்டு நிறைய 'தூய்மை' - மல்லிகை வந்தது. அன்று முழுவதும் அன்பர் போகுமிடமெல்லாம் Purity வரவேற்று, மனம் எழுப்பிய கேள்விக்குப் பதில் கூறியது.

* என் மனதில் என்றும் உள்ள இலட்சியம், நாட்டில் வளம் அளவுகடந்து பெருகி வறுமை அழிய வேண்டும்.
* அன்பர்கள் அன்னை குடிகொள்ளும் அளவுக்கு மனம் மாற வேண்டும்.
* அன்னை என்னிடம் கடலூரிலிருந்து கொண்டுவரும்படி விரும்பிக் கேட்ட மலர்கள் இரண்டு

**1) தன்னலமற்ற சுபிட்சம் (வெள்ளை நாகலிங்க மலர்)**

**2) திருவுருமாற்றம் (மரமல்லிகை).**

## வழி நடத்தும் ஜோதி

சூட்சுமப் பார்வையுள்ளவர்க்கு அன்னையை நேரில் தரிசனம் செய்யும் பொழுது அவர் முகம் சரஸ்வதியாக மாறுவது, ஸ்ரீ அரவிந்தராக மாறுவது, அவர் பாதங்களில் திடீரென பொன்னொளி எழுவது, அன்பர்கள் வீட்டினுள் பிரகாசம் தெரிவது, அன்பர்கள் வீட்டின் மேலே ஒளிப்பிழம்பு தெரிவது உண்டு.

அடிக்கடி - தினமும் - அன்பர்கள் பிரயாணம் செய்யும் பாதையில் கோடுபோல் ஒளி தெரிந்தது ஒருவருக்கு. நாம் புதிய ஊருக்குப் போனால், போகும் இடத்திற்கு வழி கேட்டுக்கொண்டு போவது வழக்கம். வாயிலி ருக்கிறது வழி என்பது பழமொழி. மேல்நாடுகளில் புது ஊருக்குப் போனால் அந்த ஊர் map கையில் தருவார்கள். வழி கேட்க வேண்டிய அவசியமில்லை.

அன்பர் ஒருவர் நண்பர் ஊருக்கு காரில் போக வேண்டியபொழுது ஏற்கனவே நண்பரிடமிருந்து பெற்ற mapயை எடுத்துப் போனார். அவருடன் வந்தவரும் அன்பர். அவர் தாம் போக வேண்டிய பாதையில் அன்னையை மானஸீகமாக அனுப்பிவிட்டார். காரில் பேசிக்கொண்டே போனதால் போகும் வழியும், அனுப்பிய அன்னையும் மறந்து பேச்சு சுவாரஸ்யத்தில் தங்களை இழந்தனர்.

ஒரு ரோட் ஜங்ஷனுக்கு வந்தபொழுது காரை ஓட்டுபவர் இடதுப்பக்கம் திரும்பினார். அன்னையை அனுப்பிய அன்பர் ரோடு பிரியும் இடத்தைக் கவனித்தார். ஓர் ஒளி வலப்பக்க ரோடு வழியாகப் போவதைப் பார்த்தார். பேச்சில் தாம் கண்டதைப் பொருட்படுத்தவில்லை. சுமார் 2 மைல் போனபின் பாதை தவறியதைக் கண்டு mapஜ சரி பார்த்து திரும்பி பழைய ஜங்ஷனுக்கு வந்து, வலப் பக்கமாகப் போய் நண்பர் வீட்டை அடைந்தார்.

**ஓட்டுபவர் வழி தவறலாம், முன்னே அனுப்பிய அன்னை சரியான வழியைக் காட்டத் தவறுவதில்லை.**